

# துறைமுகம்

கவிஞர் சுரதா

# துறைமுகம்

**கவிஞர் சுரதா**

சுவாதி பதிப்பகம்
எண்: 13, ரெட்டி தெரு,
ஆலந்தூர், சென்னை - 600 016.

# நூல் அமைப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | துறைமுகம் |
| ஆசிரியர் | : | கவிஞர் சுரதா |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கவிதை |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| ஐந்தாம் பதிப்பு | : | ஆகஸ்ட் - 2005 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரௌன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 160 |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| விலை | : | ரூ. 50 |
| நூல் வெளியீடு | : | சுவாதி பதிப்பகம்,<br>27/13, ரெட்டி தெரு,<br>ஆலந்தூர்,<br>சென்னை - 600 016. |
| ஒளியச்சு | : | திருவள்ளுவர் வரைகலையகம்<br>சென்னை - 94.<br>தொலைபேசி எண்: 2472 2205 |
| அச்சிட்டோர் | : | சேகர் அச்சகம், சென்னை - 5. |

# பதிப்புரை

உவமைக்கவிஞரின் புகழ்பெற்ற நூல்களுள் ஒன்று **'துறைமுகம்'.**

ஒவ்வொரு தலைப்புக்கும் ஒரு பக்கம் இரண்டு பக்கம் எழுதப்படும் கவிதைகளைச் சிறுகதைக் கவிதை என்று அழைத்தால், சரித்திரச் செய்திகளை மையமாகக் கொண்டு எழுதப்படும் நீண்ட தொடர்க் கவிதைகளைத் தொடர்கதைக் கவிதை அல்லது பெருங்கதைக் கவிதை என்று அழைக்கலாம்.

தனித்தனித்தலைப்புகளில் சிறுசிறு கவிதைகள், மற்றவர்களின் நூல்களுக்கு வழங்கும் வாழ்த்துக் கவிதைகள், சரித்திரக் கதைகளைப் படிக்கும் விதத்தில் ரசிக்கும் விதத்தில் சுவை குன்றாமல் வழங்கும் பெருங்கவிதைகள் எனப் பல்வேறு வடிவக் கவிதைகளை வடிப்பதில் வல்லவர் உவமைக் கவிஞர்.

தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பகங்களில் ஒன்றாக ஒளிவீசி வருகின்ற சுவாதி பதிப்பகத்தின் வெளியீடாக இந்நூலை வழங்குவதில் பெருமை அடைகிறோம்.

என்றென்றும் அன்புடன்

**சுவாதி பதிப்பகம்**

# என் குரல்

நான் மிகவும் விரும்பிப் படிக்கும் நூல்கள் இரண்டு. அதில் ஒன்று கலிங்கத்துப்பரணி. மற்றொன்று கல்லாடம்; ஆகவேதான் என் ஒரே மகனுக்கும் "கல்லாடன்" என்று பெயரிட்டேன்.

கல்லாடம் என்னும் நூலிலுள்ள நூறு பாடல்களும் மிக நீண்ட பாடல்களாகும். எதற்கும் அவசரப்படும் இன்றைய உலகத்தில், இனி அப்படிப்பட்ட நெட்டைக் கவிதைகள் எழுதுவதென்பது நேரத்தை வீணாக்குவதாகும். எனவே, மிகச் சிறு சிறு கவிதைகளை இத்தொகுப்பில் இடம் பெறச் செய்துள்ளேன்.

பழைய தலைமுறையைச் சேர்ந்த நான், புதிய தலைமுறையினருக்குத் தேவையான கருத்துள்ள கவிதைகளை வழங்கியுள்ளேன்.

கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078

அன்புடன்
சுரதா

# அந்தத் துறைமுகத்திற்கு இந்தத் துறைமுகம்

என் தந்தையார் திருவேங்கடம் அவர்கட்கும், என் அன்னை செண்பகம் அம்மையார் அவர்கட்கும் இந்நூலைப் படைக்கலாம் என்று முதலில் நினைத்தேன். இந்நூலுக்கு, நான் "துறைமுகம்" என்று பெயரிட்டிருப்பதால், நான் வாழும் சென்னையிலுள்ள துறைமுகத்திற்கே, 'துறைமுகம்' என்னும் இந்நூலைப் படையலாக்குகிறேன்.

சுரதா

# பொருளடக்கம்


பக்கம்

I. முதல் முத்திரை

திங்களே வாழ்க ... 11
என் கணவர் நிலவில் நடக்கிறார் ... 13
வினாத்தாள் ... 15
தமிழில் அர்ச்சனை ... 17
ஆதிக்கம் வேண்டுவரோ ... 20
துறைமுகம் ... 21
அன்றொருநாள் ... 24
எண்ணெய்ச் சூரியன் ... 25
வரப்புச் சாமிகள் ... 27
சிரிப்பின் கதவுகள் ... 29
செம்மீன் ... 30

2. உடையலங்காரம்

பட்டாடை உடுத்துவாராம் ... 35
வெள்ளுடை உடுத்துவாராம் ... 37
கைத்தறி வேட்டியே கட்டுவார் ... 39
பரமசிவனும் பாரதிதாசனும் ... 41

3. பார்வையும் வேர்வையும்

பல்லவி பாடிவந்தான் ... 45
நனைந்த நாயகி ... 48
நெய்வேலி வெள்ளைச்சாமி ... 50
மணப்பவர் எங்குள்ளாரோ? ... 53
ஆகட்டும் பார்க்கலாம் ... 55
தித்தித்ததா இல்லையா? ... 58

4. வளர் பிறை

ஆற்றோரம் ... 61

வென்றவனை வென்றவன் ... 65

5. இவர்கள்

சிந்துக்குத் தந்தை ... 77

அரசியல் அரிச்சந்திரன் ... 80

கவிதைத் தலைவர் நேரு ... 83

பெருந்தலைவர் காமராசர் ... 89

6. வார்த்தை வாசல்

இனிக்கும் நினைவுகள் ... 93

திருமதி சிற்றம்பலம் ... 96

ரம்போலா கவிதைகள் ... 99

இருதய வியாதிகளும் சிகிச்சையும் ... 101

பாட்டுத் தோட்டம் ... 105

கட்டில் விணை ... 110

சிரித்து மகிழுங்கள் ... 112

சந்தனக் கிண்ணம் ... 116

ஒற்றையடிப் பாதை ... 117

7. சுரதாவின் திரைப்படப் பாடல்கள்

எல்லாம் இன்பமே ... 121

துணை நீயே ... 122

கண்ணில் வந்து மின்னல் போல் ... 123

வருக வருக வேந்தே ... 124

எண்ணமெல்லாம் ... 125

அமுதும் தேனும் எதற்கு ... 126

வச்சிருக்கேன் நான் வச்சிருக்கேன் ... 127

ஆடி அடங்கும் வாழ்க்கையடா? ... 128

வசந்த காலம் வருமோ? ... 129

நெருங்கி நெருங்கிப் பழகும் போது ... 130

## 8. விதைகள்


| | | |
|---|---|---|
| நம்நாடு | ... | 113 |
| முதுமை | ... | 136 |
| சிக்கனம் | ... | 137 |
| கூட்டலும் கழித்தலும் | ... | 140 |
| குடும்ப நலம் | ... | 141 |
| கண்ணீர் | ... | 146 |
| குதிரை | ... | 147 |
| உத்தரவின்றி உள்ளே | ... | 151 |
| ஆதியும் பாதியும் | ... | 152 |
| அதைவிட | ... | 154 |
| என் முதல் சந்திப்பு | ... | 155 |
| எழுப்பியவர் எங்கே | ... | 156 |
| இதில் வெற்றிபெற | ... | 157 |
| சிவந்திப்பூ சிரிக்கிறது | ... | 159 |

# முதல்
# முத்திரை

# திங்களே வாழ்க!

"திங்களே வாழ்க!" என்றான்
தேன்மழைக் கவிஞன். "தண்ணீர்ச்
சங்கிலி அலைக ளாடும்
சமுத்திரம் தன்னில் தோன்றும்
திங்களை வாழ்த்து வானேன்
தெரிவிப்பீர்?" என்றாள். "விண்ணில்
தொங்கிடும் நிலவு நம்மைச்
சுடாததால் புகழ்ந்தேன்" என்றான்.

"பண்பட்ட கதிரே! தங்கப்
பருதியே வாழ்க!" என்றான்.
கண்பட்டுக் காதல் கொண்ட
காரிகை விளக்கம் கேட்டாள்.
"மண்முட்டை உலகம் வாழ,
மயில்நிற இருட்டு வீழ,
விண்பட்ட கதிரோன் வேண்டும்
மெல்லிய மலரே!" என்றான்.

"கண்ணகி கூந்தல் போன்ற
கார்முகில் வழங்கும் தூய
வெண்மழை நீரே! விண்ணின்
விக்கலே! வாழ்க!" என்றான்.
அண்டையில் நின்ற நங்கை
அவனிடம் விளக்கம் கேட்டாள்.
"மண்ணில்நாம் வாழ வேண்டின்
மாமழை வேண்டு" மென்றான்.

"புதியதோர் கயிற்றில் கோத்த
புனைமணித் தொடரைப் போன்ற
பொதிகதிர்ச் செந்நெல் நன்கு
பொலியட்டும்!" என்றான். "ஏனோ
பொதிகதிர் பொலிதல் வேண்டும்
புகலுவீர்?" என்றாள். "வீழா
விதிமுறை வாழை போன்றோன்
"விருந்திடும் பொருட்டே!" என்றான்.

"காதலே வாழ்க!" என்றான்.
காரணம் கேட்டாள் மங்கை.
"ஆதிநூல் குறிக்கும் அன்பின்
ஐந்திணை என்னும் இன்பக்
காதலே நெஞ்சும் நெஞ்சும்
கலந்திடும் வாழ்க்கை யாகும்
ஆதலால் வாழ்க என்றேன்
ஆருயிர் மாதே!" என்றான்.

# என் கணவர் நிலவில் நடக்கிறார்

செங்கல்லின் மீதினிலே மெதுவாய் ஏறும்
சிலந்தியைப்போல் வானவெளி வீரர் ஆர்ம்ஸ்ட்ராங்
திங்களன்று நிலவின்மேல் காலை ஊன்றிச்
செயற்கரிய செயல்செய்தார் என்று கேட்டுப்
பொங்கலன்று பூரிக்கும் தமிழர் போலப்
பூரித்தேன். வாயார வாழ்த்த லானேன்.
திங்களன்று வெற்றிகண்ட வீரர் தம்மைச்
செவ்வாயால் என்மகளும் வாழ்த்த லானாள்.

மைக்கேலும் காலின்சும் நீல் ஆர்ம்ஸ்ட் ராங்கும்
வான்மதியில் மெதுவாகக் காலை ஊன்றிக்
கைக்கோலால் ஆராய்ந்து, நிலவுப் பாறைக்
கட்டிகளைப் பூமிக்குக் கொண்டு வந்தார்.
பொய்க்காதல் தோற்பதுபோல், அமெரிக் காவின்
புதுமுயற்சி தோற்றிருந்தால், இந்த நாட்டின்
வைக்கோல்போர் வைதீகம், ராகு கேது
வரலாற்றுப் பஞ்சாங்கம் படித்தி ருக்கும்.

கண்ணெடுத்துக் கற்சிலையின் முகத்தில் வைத்த
கண்ணப்ப வேடனென்பான் பிறந்த ஊரில்,
பெண்ணெடுத்துக் கொண்டுவர அடுத்த வீட்டுப்
பெருங்கிழவர் சென்றுள்ளார். நிலவில் உள்ள
மண்ணெடுத்துக் கொண்டுவர வேண்டி என்றன்
மணவாளர் சென்றுள்ளார் விமானம் தன்னில்.
விண்ணெடுத்து விளையாடும் நிலவில், ஆங்கோர்
மேட்டின்மேல் இப்போது நடக்கின் றாராம்!

காட்டுக்குச் சென்றிருந்த பிந்து சாரன்
கன்னியொடு திரும்பிவந்தான். அதுபோல், நாக
நாட்டுக்குச் சென்றிருந்த சோழன், அவ்வூர்
நங்கையொடு தாய்நாடு திரும்பி வந்தான்.
பாட்டுக்குப் பொழிப்புரைபோல், மற்றோர் பெண்ணைப்
பந்துநிலா மண்டலத்தில் மாலை யிட்டு
வீட்டுக்குக் கூட்டிவந்தால், அவரைச் சும்மா
விடுவேனா? விரட்டாமல் உறங்கு வேனா?

ஈரோட்டுப் பெரியாரின் சட்டை போலே
இருண்டகடல்; அண்ணாவின் பேச்சைப் போலே
நீரோட்டம்; சாண்டில்யன் கதையைப் போலே
நீண்டமலை சூழ்ந்திருக்கும் நிலவை, ஆணி
வேரோட்டம் போல்மறைந்து வாழும் பாம்பு
விழுங்குமென வைதீகர் இனியும் சென்னால்,
போராட்டம் நடத்திடநான் தயங்க மாட்டேன்.
பொய்வேலிப் புராணிகரே எச்ச ரிக்கை.

# வினாத்தாள்

வெள்ளைத் தாளெல்லாம் வெறும்தாள்! நானோ,
ஆத்தாள் இன்றியே பிறந்த வினாத்தாள்!

காலாண்டுக் கொருமுறை, அரையாண்டுக் கொருமுறை,
ஆண்டின் இறுதியாம் அப்போ தொருமுறை,
மாணவர் தம்மைநான் சந்திக்க வருவேன்.

வாவென் றழைப்பதால் பள்ளிக்கு வருகிறேன்,
கேளென்று சொல்வதால் கேள்வி கேட்கிறேன்.

பாடத்தை ஒழுங்காய்ப் படிக்காத மாணவன்
என்னைக் கண்டதும் எரிச்ச லடைகிறான்.
என்னைக் கிழித்தே எறியவும் நினைக்கிறான்.

என்னை வெறுப்பதால் எனக்கென்ன நட்டம்!
கிழித்தென்னை எறிவதால் கிடைக்குமோ பட்டம்!

உண்டி கொடுத்தும் உறைவிடம் தந்தும்,
இலவசக் கல்விக் கேற்பாடு செய்தும்,
படியுங்கள் என்றுநாம் பலமுறை சொல்கிறோம்.

அடியுங்கள் என்றால் அடிக்கின் றார்களே,
படியுங்கள் என்றால் படிக்கின் றார்களா?

வெண்ணெய்க் கட்டியும், சீனியும் ஊட்டலாம்.
விழுங்கா திருந்தால் நாமென்ன செய்யலாம்.

இப்படி இருந்தால் இனிவரும் உலகம்
எப்படி மதிக்கும் இவர்களை? ஒருவன்
பழுதிலாக் கல்விப் பயிற்சி பெறாவிடில்
எழுவாய் பயனிலை என்று சொல்லுமே!

# தமிழில் அர்ச்சனை

வெள்ளத்தை ஆளுகின்ற உழவர் தம்மை
"வெள்ளாளர்" என்பார்கள். ஒவ்வோர் நாளும்
உள்ளத்தை இறைவனிடம் ஒட்ட வைக்கும்
உத்தமனை உலகத்தார் ஞானி என்பர்.
தள்ளிவைக்க முடியாத உணர்ச்சி யாலே
தத்தளிக்கும் மாந்தரெல்லாம், பக்தி என்னும்
பள்ளியிலே பயின்றால்தான் வாழ்க்கைப் பாதை
பக்குவமாய் அமையுமெனச் சான்றோர் சொல்வர்.

எப்போது பார்த்தாலும் நமது நெஞ்சம்
எங்கெங்கோ அலைந்தபடி இருக்கும்; ஒன்றைத்
தப்பென்று நாமறிந்தும், வாழ வேண்டித்
தவறுபல செய்கின்றோம். ஒவ்வோர் நாளும்
கொப்பளிக்கும் ஆசைகளின் ஆவே சத்தால்
குற்றங்கள் பலபுரியும் நமதுள் ளத்தைச்
செப்பனிட்டுச் சீராக்கி கொள்வ தற்குத்
தெய்வபக்தி மாந்தர்க்கு வேண்டு மென்பர்.

உடம்புக்குப் பெயரிடுவார் உண்டே யன்றி
உயிருக்குப் பெயரிடுவார் யாரு மில்லை,
உடம்புக்குள் உயிராக, உயிருக்குள்ளே
ஒட்டியுற வாடிநிற்கும் ஆத்மா வாக
இடம்பெற்றே ஆட்டுவிப்ப தாகக் கூறும்
இறைவனுக்கும் பெயரில்லை. எனினும் இங்கே
படம்வைத்தும், சிலைவைத்தும், தெய்வ மாகப்
பாவித்தும், வழிபட்டும் வருகின் றார்கள்.

வழிபாடாம் அர்ச்சனைக்கு வடநூல் கூறும்
மந்திரமே சிறந்ததெனக் கூறு கின்றார்.
பழங்காலத் தமிழ்ப்பாடல், அர்ச்ச னைக்குப்
பயன்படுதல் ஆகாதா? பெரியாழ் வாரின்
மொழிப்பாடல் அத்தனையும் மந்தி ரத்தின்
மூச்சன்றோ? உள்ளுணர்வின் விளக்க மன்றோ?
அழியாத செந்தமிழில் பாடிப் பாடி
அர்ச்சித்தால் கடவுள்நமைக் கோபிப் பாரா?

திருமூலர் பாடியுள்ள மந்தி ரத்தைத்
திருக்கோயில் முன்னின்று பாடக் கேட்டால்
உருகாதார் கல்நெஞ்சும் உருகும். யாரும்
உணர்ந்தோதற் கரியவனாம் இறைவ னுக்குத்
தெரியாத மொழியுண்டா? எல்லாம் வல்ல
தெய்வத்திற் கினியதமிழ் மொழியி லுள்ள
கருவூரார் பாடல்களா கசக்கும்? ஆண்டாள்
கவிதைகளைத் திருமாலா வேண்டா மென்பார்?

பிறைநிலவின் மொழிபெயர்ப்பே யானைத் தந்தம்,
பெற்றோரின் மொழிபெயர்ப்பே குழந்தை யாகும்;
வறுமையதன் மொழிபெயர்ப்பே ஏழை மக்கள்;
வானத்தின் மொழிபெயர்ப்பே பெண்ணின் பார்வை;
கறையிருளின் மொழிபெயர்ப்பே தீயோர் உள்ளம்;
கருங்கல்லின் மொழிபெயர்ப்பே சிலைக ளாகும்;
மறைநான்கின் மொழிபெயர்ப்பே பெரியோர் வாக்கு;
மந்திரத்தின் மொழிபெயர்ப்பே அப்பர் பாடல்.

எம்மொழியைத் தாய்மொழியென் றழைக்கின் றோமோ;
எம்மொழியில் நாம்கனவு காண்கின் றோமோ;
அம்மொழியே வழிபாட்டுக் குரிய தாகும்;
ஆண்டவனுக் கதுவேதான் ஏற்ற தாகும்.
சம்பந்தர், அபிராமி பட்ட ரெல்லாம்
தாய்மொழியாம் தமிழில்தான் வழிபட் டார்கள்.
எம்பெருமான், தமிழில்வழி படாதீர் என்றே
எவரிடத்தும் இதுவரையில் சொன்ன துண்டோ?

# ஆதிக்கம் வேண்டுவரோ?

சித்தம் தெளிந்தோர்- செயல்
செய்திட வல்லோர்- மெத்தை
நித்திரை இன்பத்தில் நித்தம் வெறிகொண்டு
நேரத்தைப் போக்குவரோ?

எத்தர்கள் பேச்சை -மநு
என்பவன் நூலை- நம்பி
சத்திய சீலர்கள் சங்கத் திருக்குறள்
சாரம் விலக்குவரோ?

சத்தமும் வேண்டார் -தனிச்
சங்கமும் வேண்டார் -கொத்து
முத்தமிழ் கற்று முதிர்ந்த புலவர்கள்
முத்திரை வேண்டுவரோ?

இத்தரை மீதில்- உள
இன்ப மனைத்தும் -மக்கள்
அத்தனை பேருக்கும் அல்லவோ என்பவர்
ஆதிக்கம் வேண்டுவரோ?

# துறைமுகம்

நிறைமுகத் தோடு தோன்றும்
நிலாவொளி புவிக்கு வேண்டும்.
அறிமுகம் எதற்கும் வேண்டும்.
அழகியைக் கொஞ்சும் போது
மறைமுகம் வேண்டும். கப்பல்
வாணிபம் செய்வ தற்குத்
துறைமுகம் வேண்டும். ஆங்கே
தோணியும் படகும் வேண்டும்.

தோண்டிய பள்ளம் போன்ற
தோற்றத்தைக் காட்டும் பாத்ரம்
தோண்டியாம். நிலத்தில் பள்ளம்
தோண்டல்போல், மரத்தில் பள்ளம்
தோண்டியே செய்த தாலே
தோணியாம். தோணி மீதில்
ஆண்டியும் ஏறிச் செல்வான்.
அரசனும் ஏறிச் செல்வான்.

நரம்பினால் பின்னப் பட்ட
நம்முடல் போன்று, காட்டுப்
பிரம்பினால் செய்த ஓடம்
'பிளினி' யின் காலம் தன்னில்
இருந்ததாம்; அந்த நாளில்,
இலங்கைக்குப் பயணம் செய்த
அரசருள் 'தந்தன்' என்பான்
அதிலேறிச் சென்றிட் டானாம்.

அப்படிப் பட்ட ஓடம்
அமைத்தபின், மரத்தைக் கொண்டு
தெப்பங்கள் செய்தார். மேலும்
சிந்தித்தும் முயற்சி செய்தும்
கப்பல்கள் கட்ட லானார்.
கப்பல்கள் என்னும் அந்த
உப்புநீர் வாக னத்தின்
உதவியால் கடலில் சென்றார்.

பாண்டிய மன்னர் கப்பல்,
பற்பல நாடு சென்று
மீண்டிங்கு வருமாம்; வந்து
மிதக்குமாம் உப்பு நீரில்.
தூண்டுகோல் ராஜ ராஜ
சோழனின் சொந்தக் கப்பல்,
மீண்டிங்கு வருமாம்; வந்து
மிதக்குமாம் கோரை யாற்றில்.

கண்ணீரின் மீது செல்லும்
　　கப்பல்தான் கவலை; ஆற்றுத்
தண்ணீரின் மீது செல்லும்
　　தட்டன்றோ ஓடம்? இந்த
மண்மீது நடந்து செல்லும்
　　மாந்தர்கள், மகிழ்ச்சி யோடு
விண்மீது பறந்து செல்ல
　　விஞ்ஞானி விமானம் செய்தான்.

ஆகாயம் என்னும் வானம்
　　அதுகாயப் படுவ தில்லை.
ஆகாயக் கப்பல் வீழ்ந்தே
　　அதுகாயப் படுமென் றாலும்.
ஆகாய விமான மேறி
　　அடிக்கடி வெளிநாட் டிற்குப்
போகாத வணிக ருண்டோ?
　　போதாத அமைச்ச ருண்டோ?

# அன்றொரு நாள்

வெற்றிலையின் வடிவத்தில் மான்செவியைக் கண்டேன்;
வெண்முயலின் விழியதனில் நெல்லிக்காய் கண்டேன்,
நெற்கதிர்கள் நிலாவொளியில் முற்றுவதைக் கண்டேன்;
நீருயர நெல்லுயரும் என்பதனைக் கண்டேன்;
அற்பரெல்லாம் நள்ளிரவில் குடைபிடிக்கக் கண்டேன்;
அன்றிலெலாம் பனைமடலில் கூடுகட்டக் கண்டேன்;
கற்றவர்தம் இதயத்தில் நூல்நிலையம் கண்டேன்;
கண்ணீரில் ஏழைகளின் ஏக்கத்தைக் கண்டேன்;

ஒன்றிலிருந் தொன்றென்னும் உலகநிலை அறிந்தேன்;
உணவுகளின் பிண்டந்தான் உடலென்ப தறிந்தேன்;
குன்றுகளும் நிலைமாறிக் குன்றுமென அறிந்தேன்;
கொள்கைகளே கட்சிகளின் முகமென்ப தறிந்தேன்;
வென்றவரும் சிலசமயம் தோற்பரென்ப தறிந்தேன்;
வெறும்பேச்சில் யாதொன்றும் விளையாதென் தறிந்தேன்;
பொன்னெல்லாம் மண்வயிற்றின் கருவென்ப தறிந்தேன்;
புகழெல்லாம் அறிவினலங் காரமென்ப தறிந்தேன்.

ஃஃஃ

# எண்ணெய்ச் சூரியன்

பாரிதான் மனித மேகம் ;
பறவைதான் உயிர்வி மானம் ;
மாரிதான் முகிலின் வேர்வை ;
மௌனந்தான் உதட்டின் போர்வை ;
ஏரிதான் வயலின் தாய்ப்பால் ;
எரிகின்ற விளக்கே! எண்ணெய்ச்
சூரியன் நீதான் ! தீயின்
தொடர்கதைச் சுருக்கம் நீதான் !

சித்திர விளக்கே ! உன்றன்
தேகமோ, கன்னான் செய்த
பித்தளைப் பள்ளம் ! உன்றன்
பெருமூச்சே புகையாம் ! காதல்
நித்திரைக் கேற்ற வெள்ளை
நிலவினில் ஆணும் பெண்ணும்
ஒத்திகை பார்ப்பர் ! நீயோ
உன்னடி நிழலைப் பார்ப்பாய் !

எரிகின்றாய் அரும்பு போலே
எனினும்நீ எரிவ தற்குத்
திரிவேண்டும் ; எண்ணெய் வேண்டும் ;
தீக்குச்சி வேண்டும் ; பெண்ணின்
வரிவிரல் உதவி வேண்டும் ;
மழைநீரோ, தென்றல் காற்றோ
ஒருமுறை உன்மேற் பட்டால்
உன்னுயிர் உடனே போகும்.

தாண்டுகோல் ஒருவன் பெற்றான் ;
தலைக்கோலை ஒருத்தி பெற்றாள் ;
தூண்டுகோள் அதைநீ பெற்றாய் ;
துலாக்கோலை வணிகன் பெற்றான் ;
ஈண்டெனைத் தொடாதே என்றால்
என்மகன் கேட்பான். உன்றன்
வேண்டுகோ ளதனை அந்த
விட்டில்தான் கேட்ப தில்லை !

# வரப்புச் சாமிகள்

செந்தமிழ் வளர்த்த சேதுபதி மன்னரின்
நீட்டோலைச் சுவடிப் பாட்டரங் கத்தில்
பாடுதற் கரிய யமகப் பாடல்கள்
பாட வல்லவோர் பண்டிதர் இருந்தார்.
அன்னவர் இயற்பெயர் பொன்னுச் சாமியாம்.

சான்றோரைக் கொண்டு தமிழ்ச்சங்கம் நிறுவிய
தூயவர் பாண்டித் துரைத் தேவர் அவர்களின்
தந்தையார் பெயரும் பொன்னுச் சாமியாம்.

பழகுதமிழ் மதுரையில் பாஸ்கர தாசெனும்
ஓங்குபுகழ்க் கவிஞர் ஒருவர் இருந்தார்.
அன்னவர் இயற்பெயர் என்ன தெரியுமா?
வெள்ளைச் சாமியாம். மேனாட்டில் வாழ்ந்த
வின்ஸ்டன் சர்ச்சிலும் வெள்ளைச் சாமிதான்.

நெற்றிக்கண் சங்கரன் நெருப்புச் சாமியாம் !
காக்கும் திருமால் கறுப்புச் சாமியாம் !

தூங்கா துழைத்துச் சுடப்பட் டிறந்த
காங்கோ லுமும்பா கறுப்புச் சாமிதான்.
காம ராசரும் கறுப்புச் சாமிதான்.

சூதாடு வோரெலாம் சுயநலச் சாமிகள் ;
பதுக்குவோ ரெல்லாம் பாதாளச் சாமிகள் ;
அரட்டைச் சாமிகள் ; குறட்டைச் சாமிகள் ;
ஆதாயம் தேடும் அரசியல் சாமிகள் ;
இருட்டிலே முத்தம் இடுகின்ற சாமிகள் ;
அத்தனை பேருமே அரிப்புச் சாமிகள் !

தொழுதுண்டு வாழ்வோர் தொழும்பர்கள் ; அவரெலாம்
கூம்பிய தாமரைச் சோம்பல் சாமிகள் !
உழுது பயிரிடும் உழவராம் அவர்களே
வகுத்த வயலின் வரப்புச் சாமிகள் !

சிதம்ர சாமிகள் ; திருப்பதி சாமிகள் ;
இன்னும் பற்பல சாமிகள் இருப்பினும்,
இந்நாட்டில் வரப்புச் சாமிகள் இல்லையேல்
நீரும் ஏரும், நெருங்கிப் பழகுமா?
சேறுபத மாகுமா? செந்நெல் விளையுமா?
விளையா தாதலின் விதைப்பவர் வாழ்வு
வளையா திருக்க வழிசெய்வோம் தோழரே?

ഇന്ദ്ര

# சிரிப்பின் கதவுகள்

நெருப்பின் தலைவன் சூரியனாம் ;
நெருங்கும் தலைவன் காதலனாம் ;
சிரிப்பின் கதவுகள் உதடுகளாம் ;
சீரும் தலையும் உறுப்புகளாம் ;
வரப்பின் வாகனம் நண்டுகளாம் ;
வளைவுகள் வட்டத்தின் துண்டுகளாம்,
கரிப்பின் விரிப்பே கருங்கடலாம் ;
கண்கள் கனவின் வீடுகளாம்.

ஆலையின் கைதிகள் கரும்புகளாம் ;
அருவிகள் நதியின் நரம்புகளாம் ;
சோலையின் பாடகி கருங்குயிலாம் ;
சோதனைக் காற்றே பெரும்புயலாம் ;
மாலையும் காலையும் சிறுபொழுதாம் ;
வசந்த காலம் பெரும்பொழுதாம் ,
தாலியும் வேலியும் காவல்களாம் ;
தண்ணீர்க் கோழிகள் படகுகளாம்.

# செம்மீன்

கொல்லையிலே கொடிமுல்லை ; அந்தப் பெண்ணின்
கூந்தலிலே கொடிமுல்லை முட்டை ; அவ்வூர்
எல்லையிலே பெரியகடல் ; கடலின் ஓரம்
ஏந்திழையும் இளையோனும் அமர்ந்தி ருந்தார்.
"நெல்லையிலே பிறந்தவள்நான் என்றாள்." "இவ்வூர்
நெய்தலுக்குத் தாழம்பூ நீதான்" என்றான்.
"அல்லியிலே தேனெடுக்க வேண்டும்" என்றான்.
"ஆகட்டும் அவசரமேன் அதற்குள்" என்றாள்.

"மீன்பிடிக்கும் தோழரெல்லாம் தினமும் காசை
மிச்சந்தான் பிடிக்கின்றார் அன்றி, நீல
வான்பிடிக்க முயல்கின்றார் இல்லை" என்றாள்.
"மங்கையர்கள் மட்டுமென்ன கிழிக்கின்றார்கள் !
தேன்பிடிக்க மெல்லரும்பை விடுவ தன்றித்
திசைபிடிக்கும் புகழ்பெறவா நினைக்கின் றார்கள்?
நான்பிடிக்க வந்ததிங்கே உன்னைத் தானே
நல்லவளே!" என்றுரைத்தான். "ஓகோ" என்றாள்.

"கயல்மீன்கள் வெயிலடிக்கும் பொழுதில், தண்ணீர்க்
கதவுகளைத் திறந்துகொண்டு வெளியே வந்து
வெயில்காயும் ! ஆதலினால் அவற்றை யெல்லாம்
வெயில்மீன்கள் என்றிடலாம் பெண்ணே!" என்றான்.
புயல்மீன்கள் திமிங்கிலங்கள் அத்தான் என்றாள்.
பொன்மீனுன் கண்மீன்தான் பெண்ணே! விண்ணில்
அயல்மீனைப் பாரதுதான் செம்மீன் என்றான்.
அம்மீனை நாம்தொடும்நாள் வருமோ? என்றாள்.

செங்கரும்பில், செந்நெல்லின் வயிற்றில், வாயைத்
திறக்கின்ற தாமரையில், மூங்கில் தன்னில்,
சங்குகளில், மேகத்தில், மகர மீனின்
தலையதனில் முத்துக்கள் பிறக்கு மென்பர்.
தெங்கிளநீர் பச்சைநிறம் : சிப்பி முத்தோ
தெளிவான வெள்ளைநிறம் ; பனிநீர் பெய்யும்
பங்குனியில் பிறந்தவளே ! மீனின் முத்தோ
பாதிரிப்பூ நிறத்தைப்போல் இருக்கு மென்பர்.

மீனைத்தான் தன்கொடிக்குத் தேர்ந்தெ டுத்தான்
வேப்பம்பூ மாலைமன்னன் ; புலவ ரெல்லாம்
மீனைத்தான் பெருங்கருணை பொங்கு கின்ற
விழிக்குவமை கூறியுள்ளார் ; பொன்னால் செய்த
மீனைத்தான், தூண்டிலிட்ட ஒருவ னுக்கு
விரைந்தளிந்தான் கூவத்தில் வாழ்ந்த வள்ளல்.
மீனைத்தான் குறிபார்த்துக் கொண்டி ருக்கும்
வெண்கொக்கு நாள்தோறும் குளத்தோ ரத்தில்.

ஆசையினால், அதிர்ச்சியினால், தீயால், நோயால் ;
அகிலத்தில் உயிரிழப்பர் சிலபேர். ஆனால்,
ஓசையினால் காட்டில்வாழ் அசுன மாவும்,
ஒளியதனால் விட்டில்களும், மலரில் தோன்றும்
வாசமெனும் நாற்றத்தால் கரிய வண்டும்
மருவுவதால் தும்பிகளும் உயிரி ழக்கும்.
தூசுபடாக் கண்ணாடி போன்ற பெண்ணே!
சுவையதனால் மீன்களெல்லாம் உயிரி ழக்கும்.

தேன்சுரக்கும் மலர்க் கிண்ணக் கிணறே ! அந்தச்
சீனத்து மக்களெல்லாம் பாம்பு தின்பர்.
நான்தின்பேன் கருவாடு ; நீயும் தின்பாய்.
நாய்க்கறியைத் தின்றானாம் விஸ்வா மித்ரன் !
ஏன்பெண்ணே புறாக்கறிநீ சமைக்க வில்லை
எனக்கேட்பார் பாவேந்தர். அளவு மீறி
மீன்கறியைத் தின்றதனால் துக்ளக் செத்தான் !
மிதமிஞ்சி னாலெதுவும் தீமை செய்யும்.

இப்போது விழித்துக்கொண் டுள்ளோம் ; அந்தி
இரவுவரின் நாமுறங்கி விடுவோம் : ஆனால்
எப்போதும் மீன்விழித்துக் கொண்டி ருக்கும்.
ஏனென்றால் அதன்கண்ணுக் கிமைகள் இல்லை.
முப்போதும் இனிப்பவளே ! என்று ரைத்தான்.
மூன்றுநாள் மட்டும்தான் இனிக்க மாட்டேன்,
அப்போது நீங்களெனைத் தொடாதீர் என்றாள்.
அதற்கடுத்த நாளிலெனை விடாதீர் என்றாள்.

ꙮ

# உடையலங்காரம்

# பட்டாடை உடுத்துவாராம்

இடிப்பவன், மக்கள் நெஞ்சில்
இடம்பெறான். திருடிப் பாடல்
தொடுப்பவன் என்றோ ஓர்நாள்
தோற்றுப்போய் விடுவான். நாட்டில்
நடிப்பவன் பெருமை கொஞ்ச
நாளைக்கே நிலைத்தி ருக்கும்.
கொடுப்பவன் பெயரை இந்தக்
குவலயம் மறப்ப தில்லை.

சடையப்பன் கொடுத்த தாலே
சரித்திரம் பெற்றான். வெள்ளைக்
குடையப்பன் கரிகாற் சோழன்
கொடுத்ததால் கீர்த்தி பெற்றான்.
உடையப்பன் பாரி வள்ளல்
ஊரையே கபிலர்க் கீந்தான்
இடையப்பன் ரங்கப் பிள்ளை
ஈந்ததால் சாவை வென்றார்.

யாதவர் ரங்கப் பிள்ளை
யாரவர்? வீரர் போலஞ்
சாதவர்; கொடுப்ப தற்கஞ்
சாதவர்; அதிக மாய்த்தூங்
காதவர்; வாழ்வில் வெற்றி
கண்டவர்; பிறந்த நாட்டின்
மீதவர் வைத்த பற்றால்
மேலவர் அந்தப் பிள்ளை.

பொன்மனச் செம்ம லான
புதுச்சேரி ரங்கப் பிள்ளை,
பன்மணி மாலை பூண்டு
பல்லக்கில் செல்லு வாராம்.
அன்னவர், சங்க காலத்
தரசர்போல் ஒவ்வோர் நாளும்
வன்னப்பட் டுடுத்து வாராம்.
வந்தோர்க்கும் வழங்கு வாராம்.

அணைக்கட்டுப் போன்ற தேகம்
அமைந்தவர் அணிந்த சட்டை,
மணிக்கட்டு வரையில் நீட்டம்.
மார்பினை மறைக்க மற்றோர்
துணிக்கட்டாம் ! முழங்கால் மட்டும்
தொங்கிடும் உடையைப் பார்த்தால்,
பணிப்பெண்கள் உடுத்து கின்ற
பாவாடை போலத் தோன்றும்.

# வெள்ளுடை உடுத்துவாராம்

மறைவுக்குப் பின்னர் தோன்றும்
மரியாதை, பெருமை யெல்லாம்,
துறவிக்குத் தேவை யில்லை.
துறவிகள் நம்மைப் போல
உறவுக்குள் உறவு பார்க்க
ஒருபோதும் நினைப்ப தில்லை.
அறிவுக்குள் அன்பைத் தேடி
அன்புக்குள் அவர்கள் வாழ்வர்.

அப்படி வாழ்ந்து காட்டி
அருட்பாவால் பெருமை பெற்ற
ஒப்பிலாத் துறவி யான
உத்தமர் ராம லிங்கர்,
சுப்பைய சாமி போன்று
துவராடை உடுத்தி னாரா?
அப்படி உடுத்த வில்லை.
அவரதை விரும்ப வில்லை.

உடுப்பிலே, சமைத்து வைக்கும்
உணவிலே விருப்ப மின்றிப்
படிப்பிலே விருப்பம் கொண்ட
பக்திமான் ராம லிங்கர்
இடுப்பிலோர் வெள்ளை வேட்டி
இன்னொன்றோ, உடம்பின் உச்சி
முடிப்பெனும் தலையின் மீது
முக்காடு போட்டுக் கொள்ள.

அக்காலத் துறவி யான
அப்பரோ, நம்மாழ் வாரோ
முக்காடு போட்ட தில்லை.
முற்றிலும் அதற்கு மாறாய்
எக்காலும் ராம லிங்கர்
இழைத்தநூ லாடை கொண்டு
முக்காடு தலையில் போட்ட
முனிவராய்க் காட்சி தந்தார்.

ஒப்பிலாச் சோழன் பெற்ற
ஒரேமகன் பெருநற் கிள்ளி,
எப்படி போர்த்துக் கொண்டே
இருந்திட விரும்பி னானோ,
அப்படி வள்ள லாரும்
ஆடைகொண் டுடலைப் போர்த்து
வெப்பமும் குளிரும் தாக்கி
விடாவண்ணம் பார்த்துக் கொண்டார்.

# கைத்தறி வேட்டியே கட்டுவார்

சரியான வழியைக் காட்டும்
தலைவனே, சமுதா யத்தின்
மரியாதைக் குரியோ னாவான்.
மக்களின் தலைவ னாவான்
பெரியாரால் மதிக்கப் பெற்ற
பேரறி வாளர் அண்ணா,
விரிவான கீர்த்தி பெற்று
விளங்கிய தலைவ ராவார்.

தங்கத்தால் ஆன தட்டில்
சாப்பிடும் தலைவ ருண்டு.
தங்களுக் காகப் பட்டுச்
சட்டைகள் தைப்பா ருண்டு.
மங்கிப்போய் இருந்தோர்க் கெல்லாம்
மறுவாழ்வு தந்த மேதை,
இங்குளோர் வியக்கும் வண்ணம்
எளிமையாய் வாழ்ந்து வந்தார்.

கள்ளியின் வயிற்றில் தோன்றும்
கட்டையே அகிலாம். அந்தக்
கள்ளியில் தோன்று கின்ற
கட்டைபோல்; ஏழை வீட்டுப்
பிள்ளையாய்ப் பிறந்து, சேதுப்
பிள்ளையை வென்ற மேதை
வெள்ளுடை உடுத்த தன்றி
வேறுடை உடுத்த தில்லை.

தாழம்பூ முட்பூ; கொக்கு
சந்தேகப் படும்பூ; நெஞ்சில்
வாழும்பூ அன்பு; வானம்
வளர்க்கும்பூ நிலாப்பூ; வெள்ளைத்
தாழம்பூ வேட்டி கட்டித்
தறித்துண்டு தோளில் போட்டு
வாழிய தமிழில் பேசி
வந்தவர் அறிஞர் அண்ணா.

எள்விதை கறுத்தி ருக்கும்
என்றாலும், எள்ளின் பூவோ,
வெள்ளையாய் இருக்கும். அண்ணன்
மேனிதான் கறுப்பே யன்றி,
உள்ளமோ தூய வெள்ளை.
உடுத்திய உடையும் வெள்ளை.
அள்ளிப்போய் அழகு பார்க்கும்
அழகான முத்து வெள்ளை.

# பரமசிவனும் பாரதிதாசனும்

அடியலங் காரம், செய்யுள்
அணியலங் காரம், பாட்டுப்
படையலங் காரம் கண்ட
பாரதி தாச னுக்கு
நடையலங் கார முண்டு.
நாலுபேர் மெச்சத் தக்க
உடையலங் கார மெல்லாம்
உண்டே! அச் சிவனுக் குண்டோ?

முன்னேறு முன்னே றென்று
முழங்கிய பாவேந் தர்க்குப்
பொன்னாடை போர்த்திச் சான்றோர்
பொற்கிழி அளித்த துண்டு.
தென்னாடு துதிக்கும் அந்தச்
சிவனுக்குச் சான்றோர் யாரும்
பொன்னாடை போர்த்த துண்டோ?
பொற்கிழி அளித்த துண்டோ?

ஏடுடை புரட்சிப் பாடல்
எழுதிய பாவின் வேந்தர்
ஓடையில் குளித்த துண்டே!
உடைகளைத் துவைத்த துண்டே!
காடுடை புழுதி பூசும்
கபாலியார் குளித்த துண்டோ?
தோடுடை செவியன், வேங்கைத்
தோலுடை துவைத்த துண்டோ?

வடியாத செந்தேன் இல்லை.
வற்றாத தடாக மில்லை.
அடையாளப் புலித்தோ லாடை
ஆயினும் கிழியக் கூடும்.
உடையது கிழிந்தால் வேறோர்
உடையுண்டோ சிவனி டத்தில்?
கிடையாதே! பாவேந் தர்க்குக்
கிடையாதே வேட்டிப் பஞ்சம் !

கைத்தறித் துணிகள் அந்தக்
காலத்தில் இருந்தும், வண்ணச்
சித்திரைப் புலியின் தோலைச்
சிவபிரான் உடுத்து வானேன்?
பத்தரை மாற்றுத் தங்கப்
பாவேந்தர் தம்மைப் போலக்
கைத்தறி வேட்டி வாங்கிக்
கட்டிக்கொண் டிருக்க லாமே!

# பார்வையும்
# வேர்வையும்

# பல்லவி பாடிவந்தான்

சல்லடை வானத்திலே முழுச்
சந்திரன் தோன்றியபின்
பல்லவி பாடிவந்தான் அந்தப்
பாவையை நாடிவந்தான்.
மல்லிகை பூத்ததென்றாள் மண
மாலைக் குதவுமென்றான்.
நல்லநாள் பாருமென்றாள் அதில்
நம்பிக்கை இல்லையென்றான்.

வேலிடம் சேலிடத்தில் அவள்
விழிகளோ விண்ணிடத்தில்.
காலிடம் கையிடத்தில் அவன்
கண்களோ பெண்ணிடத்தில்.
மேலிடம் வேண்டுமென்றான் மணல்
மேட்டினைக் காட்டிநின்றாள்.
நாலிடம் உள்ளதென்றாள் அதில்
நடுவிடம் தேவையென்றான்.

நதிமணல் மீதிருந்தாள் அவன்
நட்டகல் மீதிருந்தான்.
பதவுரை கொண்டுவந்தேன் உன்
பதிப்புரை வேண்டுமென்றான்.
அதைஇதைக் கேட்பதெல்லாம் பே
ராசைதான் என்றுரைத்தாள்.
கதையொன்று சொல்லிடென்றான் அவள்
கடவுள் கதையுரைத்தாள்.

எதற்கிந்த வீண்கதைகள் இனி
எதற்கிந்த வைதீகம்?
புதிய தலைமுறைக்குப் பழம்
புராணம் எதற்காக?
அதிகம் படித்தவளே! தமிழ்
அமுதினைப் போன்றவளே!
பதிகமும் கீர்த்தனையும் இனிப்
பயன்படப் போவதில்லை!

தாவரமே! எனக்கோர் வரம்
தாவெனக் கேட்டிடினும்
தாவரம் ஓர்நாளும் வரம்
தந்திடா தென்பதனால்,
நாவல் மரங்களையும் சில
நல்ல் மரங்களையும்
தாவரம் என்றழைத்தல் பெருந்
தவறென் றவனுரைத்தான்.

பூத்ததோர் மாமரத்தை அவள்
　　'புதுரதம்' என்றுரைத்தாள்.
மாத்திரை போன்றவளே மா
　　மரத்தின் அடிவேர்களே,
மூத்து வயதான பெரும்
　　முதலைகள் என்றுரைத்தான்.
பார்த்தது போதுமென்றாள் பதம்
　　பார்த்திட வேண்டுமென்றான்.

என்பால் தயவிலையோ அடி
　　இனியும் தனிநிலையோ!
முன்போல் கொடுத்திடடி ஒரு
　　முத்தம்! அதுபோதும்
என்றான் குளக்கரையில் இதழ்
　　இட்டான் இதழ்க்கரையில்.
வென்றாள் பிணக்கினிலே அவன்
　　வென்றான் அணைக்கையிலே.

# நனைந்த நாயகி

"அனந்தநா யகியே! கூந்தல்
அழகியே! ஊடி ஊடிச்
சினந்தநா யகியே! கூவும்
சேவலின் துணையே!" என்றான்.
"அனந்தநா யகியென் றென்னை
அழைக்காதீர்' உங்க ளோடு
நனைந்தநா யகிநான்! நாற்று
நடப்படும் வயல்நான்"! என்றாள்.

காய்கேட்டேன், கனிகள் தந்தாய்;
கனிகேட்டேன், காய்கள் தந்தாய்;
வாய்கேட்டேன், கன்னம் தந்தாய்;
வரவேற்பே இல்லை என்றான்.
வாய்கேட்டீர், என்வாய் நேற்று
வலித்ததால் கொடுக்க வில்லை.
காய்கேட்டீர், விருந்துக் கேற்ற
கனிதானே தந்தேன் என்றாள்.

பள்ளத்தில் தண்ணீர் தங்கும்;
பழத்திற்குள் விதைகள் தங்கும்;
உள்ளத்தில் என்ன தங்கும்?
ஓவியப் பெண்ணே! என்றான்.
உள்ளத்தில் நினைவு தங்கும்;
உணர்ச்சிகள் இப்போ தென்னைத்
தள்ளினால் இடுப்பில் சேலை
தங்குமோ? அத்தான் என்றாள்.

கூரான உளி யென் றாலும்,
கொழுந்தின்மேல் அதனை வைத்துச்
சீராகத் தட்டா விட்டால்
சிற்றுளி இறங்கா தென்றான்.
சீராகத் தட்டும் போது
சிற்றுளி இறங்கி விட்டால்
பேராபத் தன்றோ நேரும்
பிடிவாதம் வேண்டாம் என்றாள்.

சம்பங்கிப் பூவே! 'பௌத்த
சங்கிகள்' என்போர்; மாட்டுக்
கொம்புக்குள் உப்பு வைத்துக்
கொள்வதுண் டென்று சொன்னான்.
கொம்புக்குள் உப்பு வைத்துக்
கொண்டனர் எனினும் வாழ்வில்
நம்பிக்கை வைக்க வில்லை.
நாம் வைத்து வாழ்வோம்" என்றாள்.

# நெய்வேலி வெள்ளைச்சாமி

நெய்வேலி வெள்ளைச் சாமி
நிழல்தரும் சோலை தன்னில்,
மைவேலி இட்ட மங்கை
வருகைக்குக் காத்திருந்தான்.
பொய்வேலி கட்டிக் காட்டும்
புராணத்தைப் போன்று நீண்ட
தைவேலித் தெருவைத் தாண்டிச்
சந்திக்க வந்தாள் வஞ்சி.

வந்தவள் அழகைக் காண
வந்தது நிலவு. வஞ்சி
வந்ததைத் தெரிந்து கொண்டு
வந்தது தென்றல் காற்று.
சுந்தரி "அத்தான்" என்றாள்.
தொடவந்தோன் "அன்பே" என்றான்.
பந்தயம் கட்டிக் கொண்டு
பார்வைப்போர் புரிய லானார்.

நேற்றுநான் இங்கு வந்தேன்
நீவர வில்லை! ஏழாம்
வேற்றுமை உருபே! மீட்டும்
வீணையே! வீசும் தென்றல்
காற்றிலுன் கரிய கூந்தல்
கலைவதைக் காணக் காண
ஊற்றுநீர் போல நெஞ்சில்
ஊறுதே ஆசை வெள்ளம்!

"எப்போதும் உன்வாய் செவ்வாய்
எனக்குநீ என்றும் திங்கள்
இப்போதுன் சிரிப்பு வெள்ளி
இன்பந்தான் நமது பள்ளி;
தெப்பம்நீ!" என்றான். "தெப்பத்
திருநாள்நீர்" என்றாள் வஞ்சி.
வெப்பமே இல்லை இந்த
வேளையில் என்று சொன்னான்.

எப்படி இருக்கும் வெப்பம்
இரவினில்? நிலவாம் வெள்ளிக்
கொப்புளம் நெருப்புத் துன்பம்
கொடுக்குமோ அத்தான்? என்றாள்.
முப்பழம் போன்ற பெண்ணே!
முதற்பழம் கொடுப்பாய் என்றான்.
இப்பொழு தென்னி டத்தில்
எதிர்பார்க்க வேண்டாம் என்றாள்.

பதிக்கவா என்றான். எச்சில்
படுமேஎன் இதழில் என்றாள்
எதற்காக இதழ்கள். முத்தம்
இடத்தானே! சத்து மிக்க
சதைக்கனி தின்னத் தானே!
சந்தனம் பூசத் தானே!
விதைக்கவா? என்றான். சற்றே
விலகினாள். விட்டா னில்லை.

நாடென்று சொல்லு வார்கள்;
நாடினால் நகரென் பார்கள்;
போடென்று சொல்லு வார்கள்;
போட்டாலோ குடிய னென்பர்.
கூடென்று சொன்ன பின்னர்க்
குறைகூறி ஒதுங்க லாமோ?
பாடுக குயிலே! என்றன்
பக்கம்வா! என்ற ழைத்தான்.

வரவுதான் இனிமேல் என்றாள்.
வாழ்க்கையே செலவு தானே
அருகில்வா, என்றான். வந்தாள்.
அதற்குப்பின் நடந்த தென்ன?
இரவினில் உறவு கண்டார்.
இதழ்க்கனி பறித்துக் கொண்டார்.
ஒருமுறை புறாவின் சத்தம்.
ஒருமுறை வேறோர் சத்தம்.

# மணப்பவர் எங்குள்ளாரோ ?

பூமகள் என்பேர். நல்ல
புத்தகம் படிக்கும் என்னை
நாமகள் என்பாள் தோழி
நானதை ஏற்க மாட்டேன்.
பாமர மக்கள் ஏதும்
படிப்பதே இல்லை என்பாள்.
தாமரைப் பூவின் தேனைத்
தவளைபோய் உண்ணா தென்பேன்.

அம்பிகை என்னும் தோழி,
அழகான தேமல் தன்னை
வெம்பாத செம்பொன் என்று
வேடிக்கை யாகச் சொல்வாள்.
தும்பிக்கை பிள்ளை யாரே
துணையென்பாள். போடி போடி,
நம்பிக்கை போலும் வேறு
நற்றுணை இல்லை என்பேன்.

என்னைப்போல் அழகி இல்லை
என்றுநான் சொல்ல மாட்டேன்.
பொன்னைப்போல் பொன்னு முண்டு
பூவைப்போல் பூவு முண்டு
குன்றில்நான் நின்ற தில்லை;
குற்றாலம் சென்ற தில்லை;
தின்பண்டம் கொடுத்த துண்டு;
தேன்முத்தம் கொடுத்த தில்லை.

பூந்தோட்டப் புறாநான்; வண்ணப்
பொய்கைநான்; ஒவ்வோர் நாளும்
கூந்தலைப் பின்னிக் கொள்வேன்;
கொண்டையும் போட்டுக் கொள்வேன்;
நீந்துவேன்; சமைப்பேன்; அந்தி
நேரத்தில் உலாவச் செல்வேன்;
மாந்தோப்புக் குயிலாம் என்னை
மணப்பவர் எங்குள் ளாரோ?

ஒருவருக் கொருவ ரென்பர்;
உறவில்தான் உலக மென்பர்;
சரிசெய்து கொள்வ தற்கும்;
சமுதாயம் அமைவ தற்கும்;
திருமணம் தேவை என்பர்.
தேவைதான். இதனை என்றன்
அருமைத்தாய் உணர வில்லை!
அப்பாவும் உணர வில்லை!

# ஆகட்டும் பார்க்கலாம்

மூத்தநிலா வெளிச்சத்தில், தனது வீட்டின்
முற்றத்தில் நின்றபடி அவனுக் காகக்
காத்திருந்தாள், காத்துக்கொண் டேயி ருந்தாள்
கம்பாஸ்பி எனும்நடனக் காரி ஓர்நாள்.
பூத்தமலர்க் கொத்தொன்றைப் பறித்துக் கொண்டு
போர்வீரன் அலெக்ஸாண்டர் ஆங்கே வந்தான்.
வாத்துமுட்டை நிறமுடைய நடனக் காரி
வரவேற்றுப் படுக்கையறை அழைத்துச் சென்றாள்.

சென்றவுடன் மஞ்சத்தில் அமர்ந்தான். மங்கை
சிரித்தவுடன் அலெக்ஸாண்டர் சிலிர்த்தான். சேர்ந்து
நின்றவுடன் முன்னுரைபோல் முத்த மிட்டான்.
நிமிர்ந்தவுடன் ஆங்காங்கே அவளைத் தொட்டான்.
வென்றவன்நான்! எனையிங்கே வெல்லு கின்றாய்!
"வெப்பத்தில் நீஎன்னைத் தள்ளு கின்றாய்!"
என்றவளைப் பார்த்தபடி வீரன் சொன்னான்.
இதழ்முத்தம் சுடுவதில்லை என்றாள் மங்கை.

கர்வத்தின் உச்சியில்நான் நிற்பேன் என்றான்.
கட்டழகின் உச்சியில்நான் நிற்பேன் என்றாள்.
பர்வதத்தின் உச்சியிலே ஏற வேண்டின்
பயிற்சிமிகத் தேவையென்றான். ஆமாம் என்றாள்.
சர்வசித்தி பெறவரும்பும் துறவிக் கெல்லாம்
தவயோகம் மிகத்தேவை; அதுபோல், காதல்
நிர்வாகம் நாமிங்கு நடத்த வேண்டின்
நிர்வாணம் இப்போது தேவை என்றான்.

அரசாட்சி கைக்குடைக்குச் சமான மாகும்.
அக்குடையைப் பிடிப்பதனால் கைக்குண் டாகும்
சிரமங்கள் மிகவதிகம்; சுகமோ கொஞ்சம்.
தித்திக்கும் தெள்ளமுதே! கிரேக்க நாட்டின்
வரலாற்றைப் படித்தவளே உன்னைக் காண
வராவிடிலே நித்திரையே வருவ தில்லை!
உரையாட, உறவாட உதவும் பெண்ணே!
உற்றதுணை நீயென்றான். நாணி நின்றாள்.

அரிசியொரு புறத்தினிலும், நெருப்பும் நீரும்
அடுப்புமொரு புறத்திலும் தனித்தி ருத்தல்,
உருசியுள்ள சோறாவதுண்டோ? என்றான்.
ஒருநாளும் ஆகாதே? என்றாள் மங்கை.
சரியான புதுப்பொன்னே? பருவப் பெண்ணே!
தழுவுகின்ற பூங்கொடியே ! இதனை நன்கு
தெரிந்திருந்தும் நீயொதுங்கி நிற்க லாமோ?
தேனிருந்தும் வழங்காமல் இருக்க லாமோ?

இதுவேண்டாம் அதுவேண்டாம் பெண்ணே! உன்றன்
எட்டுச்சாண் அங்கத்தில் தங்கி யுள்ள
சதைஇளநீர் தானெக்கு வேண்டும். உன்றன்
சத்தான முத்தந்தான் எனக்கு வேண்டும்.
முதல்முத்தம் யார்கொடுத்தால் என்ன? நீயே
முதலிலெனை முத்தமிடு! பின்னர் நானும்
பதிப்புரையைத் தொடங்குகின்றேன். கீழே யுள்ள
படித்துறையில் அதற்குப்பின் இறங்கு கின்றேன்.

வெளிநாட்டுத் தாமரையே! வாவா! என்றான்.
விழிவலையை வீசுபவள் அவனை நோக்கி,
வெளிநாட்டுத் தாமரையில் கிரேக்க வண்டு
விழலாமோ சொல்லுங்கள்? என்று கேட்டாள்.
தெளிவாகப் பேசுகின்றாய் பெண்ணே! என்றான்.
சிங்காரி மெதுவாகச் சிரித்துக் கொண்டே,
அளவாக உண்டால்தான் செரிக்கும் என்றாள்.
ஆகட்டும் பார்க்கின்றேன் என்ற ணைத்தான்.

# தித்தித்ததா இல்லையா?

அன்றொருநாள் எனைநீங்கள் என்றாள். ஓகோ
அதைத்தானே சொல்லுகின்றாய் என்றான். நேரில்
நின்றொருநாள் எனைநீங்கள் என்றாள். அந்த
நிகழ்ச்சியின்னும் முடியவில்லை என்றான். ஆரூர்
சென்றொருநாள் எனைநீங்கள் என்றாள். அந்தத்
தேதியென்ன, மாதமென்ன? என்று கேட்டான்.
ஒன்றிரண்டு போதுமென்றாள். அதற்கு மேலே
ஒன்றிரண்டு நீகொடுத்தால் போது மென்றான்.

எவள்சிரித்தால் அரும்புகளைப் பார்க்க லாமோ,
எவள்நடந்தால் அன்னத்தைப் பார்க்க லாமோ;
அவள்சிரித்தாள். அவள்மெதுவாய் நடந்து வந்தாள்.
ஆங்கவனும் பின்தொடர்ந்து நடந்து வந்தான்.
சிவந்தவளே! நேற்றிரவு கொடுத்த முத்தம்
தித்தித்த தா?இல்லை யாசொல்? நீஏன்
கவிழ்ந்தபடி முதலிரவில் இருந்தாய்? என்றான்.
காதலுக்கு நாகரிகம் அதுதான்! என்றாள்.

# வளர்பிறை

# ஆற்றோரம்

படைகிழிக்கும் பேராற்றல் பெற்றி ருந்த
பகவனொரு சிற்றரசன். மதத்தால் புத்தன்.
வடகிழக்கே அவன்நாடாம்;* சிறிய நாடாம்;
மாமலைகள் படுத்திருக்கும் குறிஞ்சி நாடாம்.
அடைமழைக்கும், வெயிலுக்கும், விவாதத் திற்கும்
அஞ்சாத புத்தமதப் பெரியோர் நால்வர்,
குடிசெழிக்கச் செய்தோனைக் காண வந்தார்.
குறையேதும் உமக்குண்டோ? என்றான் மன்னன்.

மயில்விழித்து விளையாடிப் பொழுது போக்கும்
மலைச்சாரல் மன்னவனே! தனித்தி யங்கும்
உயிரெழுத்தாய் நீயிருந்து வருவ தாலே
ஒருகுறையும் எமக்கில்லை. நேற்று நாங்கள்,
வெயில்விழித்த வேளையிலோர் செடியைக் கண்டோம்.
விதைகண்டோம் அவ்விதையில் எண்ணெய் கண்டோம்.
இயல்வித்தால் காவியங்கள் விழிக்கும் ; காய்ந்த
எள்விழித்தால் அதில்விழிக்கும் எண்ணெய் வெள்ளம்.

இலுப்பையிலும் நெய்யுண்டு; செடியில் தோன்றும்
எள்ளினிலும் நெய்யுண்டு வேந்தே! அந்த
இலுப்பைதரும் நெய்யைவிட நாங்கள் கண்ட
எள்ளினது நறுநெய்யே சிறந்த தாகும்.
பலர்க்கிதனால் பயனுண்டோ என்று கேட்டால்
பயனுண்டு. நன்மையுண்டு. நல்லோர் போல
நலஞ்செய்யக் கூடியதென் றறிந்தே நாங்கள்
நல்லெண்ணெய் என்றிதனை அழைக்க லானோம்.

ஆத்திரத்தின் உச்சியிலே நிமிர்ந்து நின்றால்
அழிவுவரும் என்றுணர்த்தும் வேந்தே! இந்தப்
பாத்திரத்தில் குடியிருக்கும் எண்ணெய், இங்கே
பலர்தலையில் குடியேறு மாயின், அன்னார்
நேத்திரத்தின் ஒளிபெருகும்; மேனி மின்னும்;
நிச்சயமாய் உடற்சூடும் தணியும்; மேலும்
கூத்தடிக்கும் கபவாத பித்த மெல்லாம்
குளிர்நாளில் பாதிரிப்பூப் போல வாடும்.

சனியன்றும், புதனன்றும் எண்ணெய் தேய்த்துத்
தலைமுழுகி வருவோர்க்கு, மேலும் மேலும்
நினைவாற்றல் அதிகரிக்கும் இதனை நாங்கள்
நெடுங்காலம் ஆராய்ந்தே சொல்லு கின்றோம்.
அனல்வட்டம் எனுங்கதிரோன் உதிக்கு முன்னர்,
ஆறுகுளம் கேணியில்நீ ராடி னாலும்,
வினைவேந்தே! நல்லெண்ணெய் தேய்த்துக் கொண்டால்
வெந்நீரில் தான்குளிக்க வேண்டு மென்றார்.

கோடைபழகும் கரமுடையான் அதனைக் கேட்டுக்
குதூகலித்தான் பிறர்க்கதனை எடுத்து ரைத்தான்
படைபழகும் வீரர்களும் அவனும்; பச்சைப்
பசலைநிலாச் சிறுவர்களும் பிறரும்; முல்லைக்
கொடிபழகும் கோதையரும் எண்ணெய் தேய்த்துக்
கொண்டெழுந்து நதிநீரில் குளித்தெ ழுந்தார்.
அடிபழகும் அன்னத்தைப் போன்ற பெண்கள்
ஆற்றோரம் எண்ணெய்விளக் கேற்றி வைத்தார்.

தைப்பனியைப் போலுள்ளம் குளிர்ந்த மன்னன்
தாமரையைப் போல்மலர்ந்தோர் தம்மை நோக்கி;
ஐப்பசியில், சதுர்த்தசியாம் திதியில், மெச்சும்
அறிவுடையோர் எள்கண்டு பிடித்த தாலே,
நெய்ப்பசையின் பயனறிந்தோம்; எண்ணெய் தேய்த்து
நீராடி ஆனந்தக் களிப்பும் கண்டோம்.
பொய்ப்பசியை வளர்க்காதீர்! வையம் போற்றும்
புகழ்ப்பசியை வளர்த்திடுவீர்! அதுதான் தேவை.

பனித்திருநாள் நமக்குண்டு; வேங்கை வீரர்
படைத்திருநாள் நம்நாட்டில் நடப்ப துண்டு.
கனித்திருநாள் நாமறிவோம். போதி புத்தர்
கதைத்திருநாள் நமக்கெல்லாம் பெருநா ளாகும்.
மனைத்திருநாள் ஆகட்டும் இனிமேல் இந்நாள்.
வரந்தியில் மிதக்கட்டும் எண்ணெய்த் தேமல்!
தனித்திருநாள் புதுத்திருநாள் இந்நாள்! எள்ளின்
சரித்திரந்தான் நல்லெண்ணெய்த் திருநாள் என்றான்.

தள்ளாடும் கிழவர்களும் பிறரும்: புத்த
சங்கத்துச் சான்றோரை வாழ்த்த லானார்.
எள்ளேநீ நீடூழி வாழ்க! எங்கே
இருந்தாலும் நீவாழ்க! என்றார் மாதர்.
கள்ளேநீ நாட்டைவிட்டே ஒழிக! எள்ளின்
கண்ணீரே நீவாழ்க! என்றார் மேலோர்.
உள்ளீடாம் கருத்தமைந்த கவிதை போல
ஒளித்திருநாள் வாழட்டும்! என்றான் வேந்தன்.

# வென்றவனை வென்றவன்

கிழக்கிருந்து மேற்குவரை சென்று, மீண்டும்
கீழ்த்திசையில் உதித்தெழுந்தான் கதிரோன். தீரா
வழக்கிருந்து வருகின்ற உலகம், வெய்யில்
வட்டத்தால் விளங்கிற்று. வந்தான் தித்தன்.
மழைக்கிருந்து வருகின்ற பெருமை பெற்ற
மாமன்னன் அமர்ந்தவுடன் அவையை நோக்கி,
அழுக்கிருந்து வருகின்ற நிலவை, நீங்கள்
ஆதரிக்கச் சொன்னால்யான் ஒப்ப மாட்டேன்.

சோழமென்றால் சூரியனாம்; அதனா லன்றோ
சூரியன்போல் சிறந்தோனைச் சோழன் என்றார்.
ஆழமென்று கண்டறிந்த கார ணத்தால்
அலைகடலை ஆழியென்றார். உங்கட் கெல்லாம்
வேழமென்றால் தெரியாதா? பெண்க ளோடு
விளையாடும் என்மகனா வேழம்? சான்றோர்,
ஈழமென்றால் கள்ளென்பர்; செம்பொன் என்பர்;
என்மகனைப் பொன்னென்றா சொல்லு கின்றீர்?

மழைத்துளிபோல் பயன்படுவான் என்றே எண்ணி
மகிழ்ச்சியோடு யானிருந்தேன். அவனோ, நம்தாய்
மொழிக்குமுதல் வாராத எழுத்தைப் போலும்,
மூடிவைத்த புண்போலும் ஆகி விட்டான்.
வழித்தெறியும் வியர்வையவன், மயங்கும் அந்தி
மாலையிலும் காலையிலும், பூத்த பூவின்
குழிக்குள்விழும் வெறிவண்டு போன்றோன் ஆவான்.
குடைநிழலில் அதன்பள்ளம் தெரிவ துண்டோ?

கழுத்துக்கோர் அணிகலன்போல் சிறந்த தான
கட்டளையாம் கலித்துறையின் அடிகள் தோறும்,
எழுத்துக்கள் எண்ணுகின்றார் இளைஞர். ஆனால்
என்மகனோ, எத்தனைபேர் இங்கு வாழைப்
பழத்துக்கு நிகரான பெண்டிர் என்று
பார்வையினால் எண்ணுகின்றான். வேங்கை போன்று
விழித்துப்பார் என்றுரைத்தால், அவனோ பெண்மான்
விழிப்பதுபோல் விழிக்கின்றான், மருளு கின்றான்.

நாணிக்கண் புதைப்பதெல்லாம் பெண்கள் காட்டும்
நாகரிகம்! அவர்கட்கே உரிய செய்கை.
ஆணிப்பொன் மாதரைப்போல் நாணம் காட்டல்
ஆண்பிள்ளைக் கழகாமோ? ஒவ்வோர் நாளும்,
ஊனுக்கும் உப்பமைந்த காமத் திற்கும்,
ஓடுகின்றான். அவனினிமேல் திருந்த மாட்டான்.
காணிக்கை தருவோரே! பசுப்பால் கொண்டு
கழுவிடினும் கரித்துண்டோ வெண்மை யாகும்?

முள்ளிருக்கும் கள்ளியெலாம் பாலை மண்ணில்
முளைத்திடலாம். மென்பாலாம் மருதம் தன்னில்
கள்ளிருக்கும் தாமரைக்கே இடமுண் டன்றிக்
கற்றாழை வேரூன்ற இடமே இல்லை.
புள்ளிருக்கும் நகரத்தில், பொன்னி யாற்றின்
புனல்பாயும் உறையூரில், வணிகர்க் காக
எள்ளிருக்க இடங்கொடுத்தேன்; என்றன் மைந்தன்
எள்ளிநகை யாடஇடம் கொடுத்து விட்டான்.

வினைவிருப்பம் கொண்டவர்கள் உதட்டின் எச்சில்
வெறிகொண்டு, காமுகர்போல் ஒவ்வோர் நாளும்
மனைவிருப்பம் கொள்வதில்லை. கொள்வா ராயின்
வான்புகழைப் பெறமாட்டார். ஒருவன் வாழ்வில்,
தனிவிருப்பம் எத்தனையோ உண்டென் றாலும்;
தமிழ்மீதும், தமிழகத்தின் மீதும், யாரும்
நனிவிருப்பம் வைத்திடுதல் வேண்டும். இந்த
நல்விருப்பம் என்மைந்தன் இடத்தில் உண்டோ?

வெள்ளிவிழா; வெற்றிவிழா; ஆற்றின் வெள்ளம்
வீங்கிவரின் அதற்குவிழா; ஆண்டு தோறும்
உள்ளிவிழா நடத்தும்யான், தமிழுக் கிங்கோர்
உலகவிழா நடத்துதற்கு முயலு கின்றேன்.
துள்ளியெழாப் பருவமெனும் முதுமை வந்தால்,
துயர்கொடுக்க நோய்கள்வரும். அந்நோய் போன்றோன்
பள்ளிவிழா நடத்துதற்கு விரும்பு கின்றான்.
படுக்கையறைப் பக்கம்தான் திரும்பு கின்றான்.

நிறத்தாலே கறுத்தமகன், வெறுக்கத் தக்க
    நிகழ்ச்சியினால் நூறுமுறை கறுத்து விட்டான்.
அறத்தாலே திருந்துதற்கும் முயன்றேன்; மேலும்
    அன்பாலே திருத்துதற்கும் முயன்று பார்த்தேன்.
முறித்தாலும் முறிவதுண்டோ வான்வில்? என்றன்
    முயற்சியிலே யான்தோற்றேன். அவனே வென்றான்.
பொறுத்தேன்யான். இனிபொறுக்க மாட்டேன். பாவ
    புண்ணியமெல் லாமினிமேல் பார்க்க மாட்டேன்.

மெய்நீக்கி எழுத்தெண்ண வேண்டு மென்னும்
    விதியுண்டு செய்யுளுக்கு; செயலில் தூங்கும்
பொய்நீக்கி மெய்காண வேண்டும். நீரின்
    போர்வையெனும் பாசியைநாம் விலக்க வேண்டும்.
நெய்நீக்கிச் சோறுண்ணாச் சோழ நாட்டில்
    நீதிக்கே முதலிடமாம்! எனவே இங்கே,
மைநீக்கும் கைம்பெண்டிர் போலே, அந்த
    மடப்பயலை விரட்டுவதே விவேக மாகும்.

புண்புணரும் வேலோடு 'கட்டி' என்பான்
    போராடக் காத்திருக்கும் வேளை தன்னில்,
கண்புணரும் சோலைதனில் பெண்டி ரோடு
    காதலுரை யாடுகின்றான் கடையன். இந்த
விண்புணரும் வையத்தில், பழிக்கத் தக்க
    வீணன்வந்து பிறந்தானே! என்றுகூறி,
மண்புணரும் மலைகளுக்கும் அப்பால் உள்ள
    மணல்வெளிக்குத் தன்மகனைத் துரத்த லானான்.

விண்மீது வெள்ளைநிலா படுக்க, ஈர
வெற்றிலையில் ஏலக்காய் படுக்க, மின்னும்
கண்மீது மைபடுக்கப் புருவ மென்னும்
கரைமீது வில்வந்து படுக்கப் பத்துப்
பெண்மீது படுத்திருந்த குமரன், இன்றோ
பெருங்காட்டில் புல்லரிசி தன்னைத் தின்று.
மண்மீது படுத்தபடி வருந்த லானான்.
மன்னன்மகன் வாயிருந்தும் ஊமை யானான்.

முன்பிருந்த வீரர்களின் பெயரை யெல்லாம்
முல்லைநிலத் தரைமீதில் எழுதிப் பின்னர்த்
தன்பெயரை அவற்றின்கீழ் எழுதி அந்தத்
தரைப்பெயரின் பட்டியலைப் படித்துப் பார்த்தான்.
அன்னவரின் நெடும்புகழை நினைத்துப் பார்த்தான்.
அவர்களொடு தன்வாழ்வை இணைத்துப் பார்த்தான்.
குன்றருகே கூழாங்கல் போல்நான் ஆனேன்;
குளிர்மழைமுன் பனித்துளியைப் போல்நான் ஆனேன்.

ஏடாள வேண்டியவன் புலவன்; யாழில்
இசைமீட்ட வேண்டியவன் பரிசில் பாணன்;
வீடாள வேண்டியவள் மனைவி; நல்ல
விதிவகுக்க வேண்டியவன் தலைவன்; நானோ
நாடாள வேண்டியவன்; எனினும் இங்கே
நடமாடிக் கொண்டுள்ளேன். நினைத்துப் பார்த்தால்;
ஓடாத பரியாக, நிலத்திற் குள்ளே
உறங்குகின்ற நீராக இருக்கின் றேன்யான்.

இடப்பெயரை என்பெயரால் கெடுத்தேன்; பெற்றோர்
இட்டபெயர் மட்டமென மாற்றிக் கொண்டேன்.
குடிப்பெயரை மதுப்பெயர்தான் என்றே எண்ணிக்
குடிகார னாகிவிட்டேன். கற்பு மங்கைப்
படப்பெயரின் பக்கத்தில், தழுவும் காமப்
பரத்தையரின் முகவரியை எழுதி வைத்தேன்.
சடப்பெயரைத் தாங்குகின்றேன்.தெளிவாய்ச் சொன்னால்
சவத்திற்குச் சமமாக இருக்கின் றேன்யான்.

இலர்பலராய் ஆவதற்கும்; அறிவின் ஆற்றல்
இல்லாமல் பலரிங்கே இருப்ப தற்கும்;
சிலர்சிலர்போல் வாழ்நாளில் முயற்சி ஏதும்
செய்யாமை காரணமாம். தனியே இங்கு
மலர்மலராய் இருப்பவற்றைத் தொடுத்தா லன்றி
மாலையெனும் பெயரதற்கு வருவ தில்லை.
சிலர்சிலரின் வெற்றிக்கோ ஊக்கம் வித்தாம்.
சிலர்சிலரின் தோல்விக்கோ தூக்கம் வித்தாம்.

நான்பிறந்த நாட்டிலொரு கோழை யாக,
நற்றமிழைச் சுவைத்தறியா மூட னாக,
மான்பிறந்த கானகத்தில் 'உடைவேல்' என்னும்
மரத்தினது மிகச்சிறிய இலைபோ லாகத்
தேன்பிறந்த தாமரையின் தண்டில் உள்ள
சிறியதொரு முள்ளாக இருக்கின் றேன்யான்.
ஏன்பிறந்தேன் சான்றோர்கள் பிறந்த நாட்டில்?
எச்சிலிலை பயன்படுமோ மீண்டும் வீட்டில்?

தூங்கெயிலை எறிந்தவனாம் என்தாய் மாமன்
தொடித்தோட்செம் பியனென்னும் மன்ன னெங்கே?
வேங்கைமலர் மேலுதிரச் சிறுகண் யானை
விழிமயங்கி உறங்குதல்போல், பெண்க ளோடு
தூங்கியவன் நானெங்கே? இனியும் என்றன்
துயரத்தைப் போக்காமல், புகழ்சேர்க் காமல்,
வீங்கியமண் மண்டலத்தில் வாழ மாட்டேன்.
வெறும்மூச்சு விட்டுக்கொண் டிருக்க மாட்டேன்.

மலையாக நானிருக்க வேண்டும்; ஆனால்
மணலாக இருக்கின்றேன். கடலில் தோன்றும்
அலையாக நானிருக்க வேண்டும்; ஆனால்
அதன்நுரையாய் இருக்கின்றேன்; பாயும் வேங்கைத்
தலையாக நானிருக்க வேண்டும்; ஈயின்
தலையாக இருக்கின்றேன். இனியென் வாழ்வில்
எலியாக யானிருக்கப் போவ தில்லை
என்றெண்ணிப் போர்ப்பயிற்சி பெற்று வந்தான்.

கத்தியிலே வீரத்தை வைத்து வந்தான்.
கல்வியிலே நேரத்தை வைத்து வந்தான்.
பத்தடுக்கு மாளிகையில் தந்தை; வேற்றூர்ப்
பாசறையில் மீசைமகன்; ஒவ்வோர் நாளும்
நித்திரையே அவன்கண்ட ஓய்வாம்! வீர
நிகழ்ச்சிகளே அன்றாடப் பொழுது போக்காம்!
முத்தூரில் போரிட்டான்; புகழைத் தொட்டான்.
முன்னேறி முன்னேறிக் கொண்டி ருந்தான்.

சூலத்தைக் கைக்கோலாய்க் கொண்டு, வீரச்
சுவைபார்க்கும் பகைவர்களே கேளீர்! இந்த
ஞாலத்தில் எனைவெல்வோர் எவரு மில்லை.
நமன்வந்தே எதிர்த்தாலும் அவனை, நீரில்
நீலத்தைக் கரைப்பதுபோல் கரைப்பேன்! என்றும்
நெருப்புக்குத் தண்ணீரா சாம்ப லாகும்?
மூலத்தின் முன்னுரையே நான்தான் என்றே
முழக்கமிட்டான் அந்நாளில் ஆமூர் மல்லன்.

மண்டூகத் தவளையைப்போல் கத்தும் ஆமூர்
மல்லனையான் வெல்லுகின்ற வரையில் இங்கே,
உண்டாரை நெடுங்காலம் வாழ வைக்கும்
உயர்நெல்லிக் கனிதரினும் தின்ன மாட்டேன்.
பண்டோர்நாள் மறைந்ததமிழ் நூல்கள் மீண்டும்
படிப்பதற்குக் கிடைத்தாலும் படிக்க மாட்டேன்.
கண்டாரை மயக்கிவரும் கொல்லிப் பாவை
கண்ணெதிரே வந்தாலும் மயங்க மாட்டேன்.

என்றெழுந்தான் தித்தன்மகன். மறுநாட் காலை
இளம்பொழுதில் ஆமூர்க்கு வந்து சேர்ந்தான்.
நின்றெழுந்து வெப்பத்தைக் கொப்பு ளிக்கும்
நெருப்புக்கண் மாமல்லன் அப்போ தாங்கே,
குன்றெழுந்து வருவதுபோல் எழுந்து வந்தான்.
கூட்டமங்கே கூடிற்று. மற்போர் செய்தார்.
ஒன்றுபடா உள்ளங்கள்! இரட்டை வீரம்!
ஒன்றையொன்று வெல்லுதற்கு முயன்ற தாங்கே!

முறையாகப் போர்புரிந்தான் இளைஞன். சாவின்
முனையேறிக் கொண்டிருந்தான் ஆமூர் மல்லன்.
பிறைவீரன் அன்னவனை விரைவில் வீழ்த்திப்
பிணமாக்கி விட்டெறிந்தான் ஆங்கோர் பக்கம்.
உறையூரான் வெற்றிபெற்றான் என்னும் செய்தி
ஓர்நொடியில் பரவிற்றுத் தமிழ்நா டெங்கும்.
குறைகூறித் துரத்திவிட்ட வேந்தன் கேட்டுக்
குதூகலித்தான்! கூனலங்கே நிமிர்ந்த தென்றான்.

வற்றாத காவிரியே என்றன் மைந்தன்
மாவீர னாகிவிட்டான் என்னைப் போலே!
சற்றேநில் செங்கதிரே! பெருநற் கிள்ளி
சான்றோனாய் விளங்குகின்றான் உன்னைப் போலே!
உற்றாரே! உறவினரே! துரத்தப் பட்டோன்
உலகுபுகழ் பெற்றுவிட்டான்! எழுத்தும் எண்ணும்
கற்றோரே! சாத்தந்தை யாரே! என்றன்
கண்மணியை நான்காண வேண்டு மென்றான்.

தூண்டுபுகழ் பெற்றோனைக் காண வேண்டித்
துடிதுடித்தோன் ஆமூரில் அவனைக் கண்டான்.
ஆண்டுபல வாகஉனைப் பிரிந்தி ருந்தேன்.
அடிக்கடிநான் உன்நினைவால் ஒடிந்து வந்தேன்.
மீண்டும்நான் உனைப்பெற்றேன் மகனே! நீயுன்
வீரத்தால் கோப்பெருநற் கிள்ளி என்னும்
நீண்டபெயர் தனைப்புவியில் நிலைக்கச் செய்தாய்!
நெருங்காத நெஞ்சத்தை நெருங்க வைத்தாய்!

காமமெனும் சேற்றில்நீ வீழ்ந்த தாலே
கண்டித்தேன்; தண்டித்தேன்; நாக்கில் லாத
ஊமைமணி போன்றிருந்தாய் என்ப தாலே
உபயோகப் படமாட்டாய் எனநி னைத்தேன்.
தேமதுரத் தமிழ்நாட்டில் இன்றே வெற்றிச்
சிங்கமெனத் திகழ்கின்றாய். இனிமேல் உன்னைப்
பூமிமகள் சுமப்பதிலே பெருமை கொள்வாள்!
புகழ்கூட உன்மீது பொறாமை கொள்ளும்!

என்றிட்டான் அவன்தந்தை. அவனை நோக்கி,
ஏனப்பா வருந்துகின்றீர்? வருந்தா தீர்கள்!
அன்றைக்கே நான்திருந்தி இருந்தால், இந்த
அவலநிலைக் காளாகி இருக்க மாட்டேன்.
இன்றன்றோ நான்வெற்றி வீர னானேன்!
எனக்கூறி அடிபெயர்த்தான். உடனே மன்னன்
என்றைக்கும் நினதுபுகழ் நிலைத்தி ருக்கும்
என்மகனே! என்றவனைத் தழுவிக் கொண்டான்.

# இவர்கள்

# சிந்துக்குத் தந்தை

பாட்டுப் படையலினால் -புதுப்
பாதையைக் காட்டியவன்;
சீட்டுக் கவிதையினால் -சில
செய்திகள் சொல்லியவன்;
பூட்டுக் கவிதைகளை- வியப்
பூட்டிடப் பாடியவன்;
வேட்டை அரசனைப்போல்- அவன்
வென்று விளங்கியவன்.

தந்தைக்குக் கால்களவன் -பெற்ற
தாய்க்கிரு கண்களவன்;
பந்துக்குக் கைகளவன்- பெண்கள்
பார்வைக்குக் காமனவன்;
அந்திக்குத் தென்றலவன் -வைகை
ஆற்றுக்குப் பாலமவன்;
சிந்துக்குத் தந்தையவன்- செய்யுள்
சிங்கத்தின் சிங்கமவன்.

மன்னவன் பேரவையில் -கவி
மாலை தொடுத்தவனாம்;
கன்னியர் மார்பினிலே -தினம்
கண்ணைப் பதித்தவனாம்;
தென்னவன் அன்னவனாம் -சதைச்
சேற்றில் விழுந்தவனாம்;
அன்னவன் பொற்கட்டியாம் -அவன்
அண்ணா மலைரெட்டியாம்.

வாசல் நிலவுகளாம்- நய
வஞ்சக வஞ்சியரின்
ஓசை உதடுகளில்- அவன்
ஒத்திகை பார்த்துவந்தான்.
ஆசை அரங்கத்திலே -எழில்
அங்கச் சுரங்கத்திலே
பூசை புரிவதுதான் -பெரும்
புண்ணியம் என்றிருந்தான்.

யாப்பு முறையறிந்தோன் -அரை
யாப்பெனும் நோய்வழக்கின்
தீர்ப்பில் தளர்ந்துவிட்டான்- உடல்
தேய்ந்து மெலிந்துவிட்டான்!
காப்புக் கவியரசன்- நெடுங்
காலம் உயிர்வாழும்
வாய்ப்பை இழந்துவிட்டான் -பிணி
வந்து மடிந்துவிட்டான்.

அள்ளும் அழகுடையோன்- அவன்
அங்கம் அழிந்திடினும்
தெள்ளு தமிழ்க்குதவும்- அவன்
சிந்துகள் வாழ்ந்திருக்கும்!
கொள்ளி அணைவதுண்டு- நிறம்
கொண்ட மயிலிறகின்
புள்ளி அழிவதுண்டோ? -குளிர்
பூம்புனல் வெள்ளத்தினால்.

மண்ணில் நெடுங்காலம் -அந்த
மாகவி வாழ்ந்திருந்தால்
பண்ணைப் பயிர்போலே -சந்தப்
பாடல் வளர்த்திருப்பான்.
கண்ணுக் கினியகவி -இன்ப
காவியம் தந்திருப்பான்.
வண்ணக் குருத்தோலை- கத்தி
வாய்ப்பட் டழிந்ததுவே.

கழுகு மலைவளத்தைக் -கதிர்
காட்டும் தினைப்புனத்தை
ஒழுகும் அருவியினை -எழில்
ஓவியக் காட்சியினைப்
பழகும் தமிழ்மொழியில் -அவன்
பாடி இருப்பதுபோல்
அழகு நயத்தோடு- பிறர்
ஆக்கல் எளிதல்லவே!

# அரசியல் அரிச்சந்திரன்

கூன்விழுந் திருந்த நாட்டின்
கூனலை நிமிர்த்த வந்த
வான்புகழ்த் தலைவ ரான
வ. உ. சி. புரட்சி செய்ய
நான்வரு கின்றேன். என்று
நவின்றவ ராவார். இன்பத்
தேன்சுவைக் கவிஞ ராவார்.
தென்னாட்டுத் திலக ராவார்.

வடக்கே ஓர் திலகர்; தெற்கே
வ. உ. சி. இல்லை என்றால்
விடுதலை வேக மிங்கே
வீழ்ச்சியுற் றிருக்கும். மேலும்,
படிக்கட்டு தன்னில் குந்திப்
பழங்கதை பேசும் நாட்டில்,
கொடுப்பதை வாங்கும் பிச்சைக்
கொள்கைதான் வளர்ந்தி ருக்கும்.

கொட்டாவித் தலைவ ரெல்லாம்
குனிந்துகொண் டிருந்த நாளில்,
வெட்டாத வாளும்; நன்கு
விளையாத நிலமும்; கைக்கே
எட்டாத கனியும் காயும்
இருந்தென்ன? வெள்ளைக் காரன்
பட்டாளம் என்ன செய்யும்
பார்க்கின்றேன் ஒருகை என்றார்.

வெள்ளாட்டின் தலையைக் காட்டி
ஓநாயின் கறியை விற்கும்
கள்ளிமுள் நெஞ்சம் கொண்ட
கயவர்வாழ் உலகில், அந்தப்
பிள்ளையோ தூய்மை யான
பிள்ளைப்பால் போன்றி ருந்தார்.
வெள்ளியா கறுக்கும், கட்டி
வெண்ணெயா நீரில் மூழ்கும்?

இன்றுள்ள தலைவ ரெல்லாம்
ஏதேதோ செய்து செய்து,
குன்றுபோல் செல்வம் சேர்த்துக்
குவிப்பதாய்ச் சொல்கின் றார்கள்.
அன்றைய தலைவர் பிள்ளை
ஆதலால்; பணமோ காசோ
ஒன்றுமே சேர்த்தா ரில்லை!
உயர்ந்தவன் புகழ்தான் சேர்ப்பான்.

கனிதரும் மரங்கள், அந்தக்
கனிகளைப் புசிப்ப தில்லை.
தனிச்சுடர் வழங்கும் தீபம்
தனக்காக எரிவ தில்லை.
மனிதருள் சிறந்தோ ரெல்லாம்
மற்றவர்க் காக வேண்டி
அனைத்தையும் இழப்பர். வாழ்வில்
அனைத்தையும் இழந்தார் பிள்ளை.

தகுதியும் திறனும் கொண்ட
தலைவனே வெற்றி காண்பான்.
அகரமே முதலில் நிற்கும்
அவர்நின்றார். சிறந்த முத்து,
மகரமீன் தலையி லன்றி
மற்றமீன் தலையில் என்றும்
அகப்பட்டு விடுவ தில்லை.
அவர்போன்றார் இப்போ தில்லை!

# கவிதைத் தலைவர் நேரு

சுவைகண்டார் இலக்கியத்தில்; துணைகண்டார்
திருமணத்தில்; தொடர்ந்து சுற்றிப்
புவிகண்டார்; விந்தைபல இவர்கண்டார்;
வெளிநாட்டுப் புரட்சி கண்டார்;
கவிகொண்ட உரைநடையில் கடிதங்கள்
எழுதிநமைக் கவர்ந்து கொண்டார்;
எவர்கண்டும் காணாத மிகப்பெரிய
கூட்டத்தை இவரே கண்டார்.

பச்சிலைபோல் குளிர்ந்தவுளம் இவர்பெற்றார்;
பேரறிஞர் பழக்கம் பெற்றார்;
விச்சையெனும் கல்வியினை மேன்மேலும்
ஆராய்ந்து விளக்கம் பெற்றார்;
உச்சியெனும் உயர்ந்தநிலை இவர்பெற்றார்;
உலகத்தில் உயர்வு பெற்றார்;
எச்சமெனும் புகழ்பெற்றார்; இந்திரா
காந்தியையும் இனிது பெற்றார்.

தென்னகத்தில் ஓர்துறவி விழித்திருந்தார்
பசித்திருந்தார்; தீரர் நேரு,
தன்னகத்தில் விழித்திருந்தார்: சிறையதனில்
பசித்திருந்தார், தனித்தி ருந்தார்;
முன்னொருசெந் தமிழ்ப்புலவர் பெரும்பசியால்
பறந்திட்டார்; முகமும் சோர்ந்தார்;
பன்மையிலே ஒருமைகண்ட பண்டிதரும்
பலகாலம் பறந்தார் வானில்.

கங்கையிலே, யமுனையிலே, காவிரியின்
கரையினிலே, கத்தித் தத்திப்
பொங்குடல் மீதினிலே, பொய்கையிலே,
வைகையிலே, புன்செய், நன்செய்
எங்கெங்கும் தெளித்திடுவீர் என்சாம்பல்
தனையென்றே எழுதி வைத்தார்.
இங்கிவர்போல் எழுதிவைத்தோர் எவரேனும்.
நாட்டிலுண்டோ? இருந்தால் சொல்வீர்!

எவரைப்போல் இவரென்னும் பேச்சுக்கே
இடமில்லை; இந்த நாட்டில்,
இவரைப்போல் எவரென்னும் பேச்சுக்கே
இடமுண்டாம்; இவர்க்கும் இங்கோர்
தவறுண்டாம் எனக்கூறின் முன்கோபம்
ஒன்றேதான் தவறாம்! சின்ன
துவரையுள்ளம் கொண்டோரே இக்குறையைப்
பெருங்குறையாய்ச் சொல்வர் கண்டீர்.

(கும்மி)

கண்ணில் கருணையும் கைதனில் நூலையும்
கல்வியை நெஞ்சிலும் வைத்தவராம்;
மண்ணில் அடியையும் விண்ணில் புகழையும்
மார்பில் மலரையும் வைத்தவராம்.

பொய்யழுக் கற்றநல் அந்தணராம்- புவி
போற்றும் புதுமை புரிந்தவராம்;
செய்யும் செயலில் சிறந்தவராம் -பெருந்
தேசத்தை வாழ்விக்க வந்தவராம்.

குழந்தையை நேசிக்கும் பண்டிதராம்- மூடக்
கொள்கையைக் கண்டிக்கும் பண்டிதராம்;
விழுந்த மழைத்துளி போன்றவராம் -புது
விஞ்ஞான ஏக்கம் நிறைந்தவராம்.

சாதி மதங்கள் கடந்தவராம்- அவர்
சத்திய கீர்த்தியைப் போன்றவராம்;
நீதியும் நேர்மையும் கொண்டவராம் -பகை
நெஞ்சிலும் நட்பாய் நுழைந்தவராம்.

தூங்கிய வேங்கை விழித்ததுபோல் -புகைத்
தூக்கம் கலைந்த நெருப்பதுபோல்
ஆங்கிலர் ஆட்சியை நின்றெதிர்த்தார் -உயிர்
அல்லவோ பாரதம் என்றுரைத்தார்.

ஆலையும் நற்கல்விச் சாலையு மேநமக்
காலய மாகுமென் றேயுரைத்தார்.
மேலை நிலத்தவர் விந்தையைக் கண்டுநாம்
வேடிக்கை பார்ப்பதோ என்றுரைத்தார்.

கூம்பலும் சோம்பலும் கூடாதென்றார்- வெறும்
கூச்சலில் வண்டியும் ஓடாதென்றார்.
சாம்பல் எரியுமோ மீண்டுமென்றார் -புதுச்
சாதனை அல்லவோ வேண்டுமென்றார்.

இந்தியா சிறந்த தேசம்
இல்லையா? என்று கேட்பர்;
இந்திய நாட்டில் ஏழ்மை
இல்லையா? என்று கேட்பேன்.
இந்தியா வாழ வேண்டும்;
இரணியன் இறந்த நேரம்
அந்தியா? பகலா? என்னும்
ஆராய்ச்சி இன்றா தேவை?

இல்லையே என்று மக்கள்
ஏங்குதல்; எங்கள் வாழ்வு
தொல்லையே துயரே என்று
சொல்லுதல்; சிலர்நம் நாட்டில்
கொல்லைப்பூ வாசம் வீசக்
கூடத்தில் ஊஞ்ச லாடல்
நல்லதா? இந்தப் போக்கு
நாட்டுக்குத் தேவை தானா?

காட்டுக்கு முன்கா லத்தில்
கமண்டல முனிவர் தேவை;
ஏட்டுக்குத் தேவை என்ன?
எழுத்தாணி. ஆனால் இன்றோ
காட்டுக்குத் தேவை, நல்ல
காவலே யாகும். பாடும்
பாட்டுக்குத் தாளம் தேவை.
பணத்திற்குத் திட்டம் தேவை.

எனவேதான் புதிய சட்டம்
இயற்றினோம். பொருளா தாரத்
தனிவேதம் எழுதா விட்டால்
தளராதோ நமது நாடு?
கனிபோதும் அணிலுக் கெல்லாம்;
கயல்போதும் கொக்குக் கெல்லாம்;
மனம்போது மென்ப தில்லை
என்பதால் வகுத்தோம் சட்டம்.

என்றுநம் நேரு சொன்னார்.
இந்திய நாட்டு மக்கள்
முன்னேற வேண்டு மென்று
முழுமூச்சாய்ப் பாடு பட்டார்.
தென்மொழித் தமிழ்போல்; வீசும்
தென்றல்போல் சிறந்த நேரு,
நன்மையின் தூதர்! பேச்சு
நாயகர்! நாட்டின் தீபம்.

நாகரி கத்தின்வ ரம்பனார்;
நாலுதி சைக்கும்வ ரம்பானார்;
ஈகைய ளிப்பதில் கண்ணானார்;
எல்லைவ குப்பதில் கண்ணானார்;
பாகமெ னெச்சம நேரானார்;
பண்பில்ப ழுத்தவர் நேரானார்;
தாகந்த விர்ப்பத்தில் நீரானார்;
தம்முடல் வெந்தவர் நீறானார்!

பாரினில் மேருவும் இன்றில்லை;
பஃறுளி யாறும் இன்றில்லை;
தாருவில் கற்பகம் இன்றில்லை;
சகோட யாழும் இன்றில்லை;
கோரிய செந்தமிழ்க் காப்பியமாம்
குண்டல கேசியும் இன்றில்லை;
ஓரியும் பாரியும் இன்றில்லை;
உத்தமர் நேருவும் இன்றில்லை!

13- 11- 1976 -ல், சென்னை வானொலியில் பாடிய கவிதை

# பெருந்தலைவர் காமராசர்

மகராசர்! விருதுநகர் காம ராசர்.
மக்கள்படும் துயர்தீர்த்து வந்த நேசர்.
சுகங்காண விரும்புவதே வாழ்க்கை என்பர்.
சுகமென்ன பெருந்தலைவர் கண்டார்? கையில்
தொகையுண்டா? தொகைசேர்க்க முயன்ற துண்டா?
தூக்கமுண்டா? சோம்பேறித் தனந்தான் உண்டா?
புகைவாசம் இவருதட்டில் வந்த துண்டு.
பொடிவாசம் இவர்மூக்கில் வந்த தில்லை.

அச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்,
அசையாமல் இவர்நின்றார். பணங்கா சென்னும்
மிச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்,
விடுதலைப்போர்ப் படைநடுவில் நின்றார். வாழ்வின்
உச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்,
உழைக்கின்ற தோழர்களின் அருகில் நின்றார்.
எச்சத்தில் சிலர்நின்றார். மனைவி மக்கள்
இல்லாத காரணத்தால் தனித்து நின்றார்.

அரசியலில் அக்பரைப்போல் கெட்டிக் காரர்.
அனுபவத்தில் ஈரோட்டுப் பெரியார் போன்றார்.
புரிந்துகொள்ளா திருக்கையிலும் பேச மாட்டார்.
புரிந்துகொள்ளும் போதுமிவர் பேச மாட்டார்.
புரிந்தபின்னர் இவரதிகம் பேச மாட்டார்.
புவியிலிவர் பெயர்பரவா இடமே இல்லை.
விரிந்தபுகழ் உடையோர்க்கும், கதிரோ னுக்கும்,
விண்ணுக்கும் விளம்பரங்கள் தேவை யுண்டோ?

அன்றிருந்த மன்னர்களின் கரங்கள் நீளம்;
அவ்வாறே இவர்கரங்கள் மிகவும் நீளம்.
அன்றிருந்த மூவேந்தர் செயல்கள் யாவும்
அருஞ்செயல்கள்; இவர்செயலும் அவ்வா றேயாம்.
குன்றிருந்தால்; மலையிருந்தால், மலையின் பக்கம்
குளிர்ந்தவொரு சிற்றருவி இருந்தால், ஆங்கே
சென்றவர்கள் பயனடைவர்; காம ராசர்
சிந்தனையை ஆதரித்தால் நாடு வாழும்?

# வார்த்தை வாசல்

# இனிக்கும் நினைவுகள்

எத்தனையோ ஆசையுண்டு நமது நெஞ்சில்;
எத்தனையோ ஏக்கமுண்டு நமது வாழ்வில்;
எத்தனையோ எண்ணுகிறோம்; எண்ணும் எண்ணம்
எல்லாமே இனிப்பதில்லை; கசப்ப தில்லை;
ஒத்தமனம் கொண்டுவிட்டால் காதல் ஆங்கே
ஊற்றெடுக்கும்; நினைவெல்லாம் இனிக்கும்; கல்விச்
சத்துடையோர் தொடுக்கின்ற பாடல், நன்கு
சாதிக்கும்! தலைமைக்கும் தலைமை தாங்கும்.

பக்குவத்தைப் பழுத்தபழம் காட்டும்; நல்ல
பாடல்களை அப்பாடல் கருத்து காட்டும்.
தக்கவர்தம் கவிதைகளே தமிழைக் காக்கும்.
தமிழ்நுட்பம் அறியாதார் சருகுச் செய்யுள்
மக்களிடம் போய்ப்பழகும் இந்த நாளில்,
மணிக்கவிஞர் எழில்முதல்வன் வடித்த பாடல்,
வீணைக்கும் நரம்பாகும்; கரும்பு மாகும்.
விணைக்கும் நரம்பாகும்; கரும்பு மாகும்.

அல்லிமலர் போன்றவளாம் அழகுப் பெண்ணை;
ஆசையொடு புத்தகத்தில் ஆட விட்டும்;
கல்மலையின் மெல்லியமே லாடை போன்று
காட்சிதரும் அருவியொன்றை ஓட விட்டும்;
மல்லிகையைப் பந்தலிலே படர விட்டும்;
மடலேறும் வண்டுகளைப் பாட விட்டும்;
நெல்விளையும் தகட்டூர்வாழ் கவிஞர், செய்யுள்
நிதிநமக்குப் புதிதாக வழங்கி யுள்ளார்.

வனந்தெரிந்த இடத்தில்போய் மேயும் மானை
'வற்கலையே' என்றழைக்க வேண்டின், சொல்லின்
இனந்தெரிந்து வைத்திருக்க வேண்டும். 'வெய்யோன்
இழைக்கும்நாள்' என்றெழுத நுட்பம் வேண்டும்.
'சினந்தணிந்த செங்கதிரோன்' என்று பாடத்
தேன்சங்கப் பாடல்களில் பயிற்சி வேண்டும்.
மனந்திறந்து சொல்லுகிறேன், சங்க நூலின்
வழிப்புலமை என்னைப்போல் இவர்க்கு முண்டு.

விலைமோரில் கடைவதற்கு வெண்ணெய் ஏது?
வெறும்பாட்டில் சுவையேது? வண்ணப் பச்சை
இலைமாலை மணந்தருமோ? சொல்வீர்? என்றே
எழில்முதல்வன் கேட்கின்றார். நானும் கேட்பேன்.
கலையாக்கம் கருத்தாழ மெல்லாம், போலிக்
கவிதைகளில் குடியிருக்க வருவ தில்லை.
பலர்போற்றும் புலமையிலான் தொடுக்கும் பாடல்
பகுதியைப்போல் நிலைத்திருக்கப் போவ தில்லை.

குழல்முதல்வன் கீதையினால் கீர்த்தி பெற்றான்
குருபாதன் சதகத்தால் பெருமை பெற்றான்.
கழல்முதல்வன் அதிவீர ராமன் என்பான்
கனிந்தசுவைக் காவியத்தால் ஆவி பெற்றான்.
எழில்முதல்வன் இந்நூலின் மூலம், தக்க
இடம்பெற்றார். மிகச்சிறந்த செய்யுள் செய்யும்
தொழில்முதல்வன் எனும்தகுதி பெற்றார். என்றும்
தூங்காத பெரும்புகழை விரைவில் பெற்றார்.

பூமாலை அசைந்தாடும் பக்கம் ஈக்கள்
போவதில்லை, பலரிங்கே ஈக்கள் போன்று
பாமாலை என்றாலே தொடுவ தில்லை.
பதிப்பகமும் மதிப்பளித்து வளர்ப்ப தில்லை.
காமாசோ மாவென்றே எழுது வோரின்
கதைபடிக்கும் பேர்வழிகள், இந்நூல் என்ன
தேமாவா? புளிமாவா? என்றால், நூலைத்
திறந்துபடித் தால்பிறகு தெரியும் சேதி!

---

பேராசிரியர் எழில்முதல்வன் எம். ஏ., அவர்கள் எழுதிய 'இனிக்கும் நினைவுகள்' என்னும் கவிதை நூலுக்கு 1966 ல் வழங்கிய அணிந்துரை.

# திருமதி சிற்றம்பலம்

அரியபல கட்டுரைகள் ஏடுகளின்
அகலத்தை அளந்த துண்டு;
கருவிமழை போற்சிறந்த காவியங்கள்
எழுந்தவொரு கால முண்டு;
பருவநிலை மாறுதல்போல் சிந்தனையில்
புதுமைபல படர்ந்த தாலே
நுரைமணிகள் ஏந்திவரும் சிற்றருவிச்
சிறுகதைகள் நுழைதல் கண்டோம்.

ஏட்டில்நடை பெறுங்கவிதை கட்டுரைகள்,
சிறுகதைகள் எல்லாம்; தீயின்
சூட்டில்நடை பெறும்சமையல் பக்குவத்தைப்
போன்றதுதான், சுருங்கச் சொன்னால்,
நாட்டில்நடை பெறும்நிகழ்ச்சி ஒவ்வொன்றும்
சிறுகதையாம்; நல்லோர் செய்த
பாட்டுநடை தேனமுதாம்! உரைநடையே
பொதுமக்கள் பசிக்குச் சோறாம்!

அதிமதுர காவியத்தால் அத்தனைபே
　　ரையும்தூக்கி அடித்தான் கம்பன்!
இதுவரையில் செயங்கொண்டான் பரணியினை
　　வெல்லும்நூல் எழுந்த தில்லை!
கதைவழியில் புதுவழியைத் தமிழர்க்குக்
　　காட்டியவர் கல்கி என்றால்;
புதியநடை, புதியவழி, சிறுகதையில்
　　புகுத்தியவர் புதுமைப் பித்தன்.

முத்தனுக்குப் பின்முனியன் உழுதுபயிர்
　　செய்வதுபோல் முதிர்ந்த கல்விப்
பித்தனுக்குப் பின்வந்து சிறுகதைகள்
　　பயிர்செய்யும் பெரியோன் தந்த
சித்திரப்பெண் 'திருமதிசிற் றம்பல' த்தை
　　நான்தொட்டுச் சிலிர்த்தேன்! நல்ல
புத்தகத்தை ஏழெட்டு முறைபடிப்பேன்;
　　அவ்வாறே புரட்டிப் பார்த்தேன்.

திறன்தோய்ந்த சிந்தனையால், தேன்தோய்ந்த
　　தலைப்புகளால், செழித்த சொல்லால்,
சிறந்தோங்கும் சிறுகதைகள் பலஎழுதிப்
　　பரிசுபெற்ற திறமை யாளர்
அறந்தாங்கிப் பூவைநகர் எழுத்தாளர்
　　ஆறுமுகம் அவர்கள்; வேங்கை
மறம்தாங்கும் வீரர்விழி போற்சிறந்த
　　சிறுகதைகள் வழங்கி யுள்ளார்.

இரவல்நடை எழுத்தாளர், வான்கோழி
எழுத்தாளர், இவர்கள் எல்லாம்;
ஒருவர்நடை போலெழுதிப் பிறர்கதையின்
பெயர்மாற்றி உயர்வு காண்பர்.
அருவிநடை எழுத்தாளர் பூவைநகர்
ஆறுமுகம் அளித்த நூலில்,
இரவல்நடை, எச்சில்நடை ஏதுமில்லை,
முகமூடி எழுத்து மில்லை.

அலைவரம்பு மீறிவிடின் நெய்தல்நிலப்
பகுதியெலாம் அழிந்து போகும்.
கலைவரம்பு மீறிவிடின் சமுதாயச்
சிந்தனைகள் கருகிப் போகும்.
இலைநரம்புச் சிறுகதைகள் பதினான்கைக்
கொண்டிருக்கும் இந்நூல், வாழ்க்கை
நிலைவரம்பை மீறவில்லை எனக்கூறி
இத்தோடு நிறுத்து கின்றேன்.

---

பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் எழுதிய 'திருமதி சிற்றம்பலம்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு 1966 ல் வழங்கிய அணிந்துரை.

# ரம்போலா கவிதைகள்

நாட்டைக் கொடுத்திடுவர் -அவர்
நஞ்சினை ஒத்தவர்; நெஞ்சம் நெளிந்தவர்
வீட்டைக் கெடுத்திடுவர்- அறி
வீனரெல் லாந்தமிழ் வாணரென் றெண்ணியே
ஏட்டைக் கெடுத்திடுவர்- வெறும்
எண்ணிக்கை யாளராம் கிண்ணிக் கவிஞர்கள்
பாட்டைக் கெடுத்திடுவர்- பிறர்
பாட்டுக்குள் ளேவிளை யாட்டு நடத்துவர்.

ஓலைக் கவிதைகளாம் -தமிழ்
ஓசை வளர்த்திடும் ஆசைக் கவிதைகள்
சோலைக் கவிதைகளாம் -சிறு
சோற்றுக்கும் கூழுக்கும் பாடும் கவிதைகள்
வேலிக் கவிதைகளாம்- பணம்
விட்டெறிந் தாற்சிலர் கட்டும் கவிதைகள்
கூலிக் கவிதைகளாம் -பிழை
கொண்ட கவிதைகள் நொண்டிக் கவிதைகள்

கட்டடம் கட்டுபவன் -ஒரு
கல்லொடு மற்றொரு கல்லினைச் சேர்த்ததை
ஒட்டிடும் தன்மையைப்போல் -பதம்
ஒட்டுவ தாலுரு வாகும் தமிழினில்
பட்டமும் பெற்றவராம் -இவர்
பாட்டுப் படையல்நம் நாட்டுத் துறைமுகப்
பட்டினம் பெற்றகலம்- இது
பச்சைத் தமிழர்கள் மெச்சிடும் புத்தகம்.

நாட்டின் விடுதலையை- நிலை
நாட்டிட ரம்போலா தீட்டிய பாட்டுக்கள்
கோட்டைக் கதவுகளாம் -புகழ்
கொண்ட விருத்தங்கள் சந்தச் சிலம்புகள்.
ஏட்டில் படுத்திருக்கும்- தமிழ்
எண்ணங்கள் பண்பட்ட வண்ணங்க ளாம்! இவை
ஊட்டும் உணர்ச்சியினால் -தனி
ஊக்கம் பிறந்திடும்! தூக்கம் பறந்திடும்!

ஒற்றை நிலாவெளிச்சம்- பல
ஊருக்கும் நாட்டுக்கும் ஓசை உலகுக்கும்
முற்றும் பயன்படல்போல் -மொழி
மூதறி வாளரின் பாடல் பயன்படும்.
வெற்றி விளைச்சலிது- தமிழ்
வித்தை அறிந்தவர் முத்திரை நூலிது.
கற்றுத் தெளிந்தவர்கள் -தரும்
கற்பனைப் பாடல்கள் நெற்பயிர் அல்லவோ?

---

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரானஸ் அவர்கள் எழுதிய 'ரம்போலா கவிதைகள்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு 1966 ல் வழங்கிய அணிந்துரை.

# இருதய வியாதிகளும் சிகிச்சையும்

ஆதி இலக்கிய நூல்கள் -அவை
ஆழ்கடல் நீந்தும் கலன்கள்;
நீதி இலக்கிய நூல்கள் -அவை
நேர்வழி காட்டிடும் கைகள்;
சாதி இலக்கிய நூல்கள் -அவை
சாக்கடை நீரின் புழுக்கள்;
வீதி இலக்கிய நூல்கள்- சுக
வேட்டையில் தோன்றிடும் நோய்கள்.

மெத்தைக் கதைகளும் பாட்டும் -வெறி
வேகத்தை அல்லவோ ஊட்டும்.
வித்தை நுணுக்கங்கள் இல்லா- வெறும்
வேடிக்கை நூல்களின் மூலம்
புத்தி விளங்குவ துண்டோ -சுரைப்
பூவில் நறுமணம் உண்டோ?
சித்தம் தெளிந்திட வேண்டின்- குறை
தீர்க்கும் சுவடிகள் வேண்டும்.

சிந்தனைக் கட்டுரை நூல்கள்- பிணி
தீர்க்கும் மருத்துவ நூல்கள்;
சந்திர மண்டலச் செய்தி -மழை
சாத்திரம்; தத்துவம்; தர்க்கம்;
பைந்தமிழ்ச் சொல்லின் விளக்கம் -தமிழ்ப்
பண்ணியல்; மண்ணியல் நுட்பம்;
யந்திர வித்தை விளக்கம்- இவை
யாவும் நமக்கிங்கு வேண்டும்.

தாயின்றி வாழ்பவ ருண்டு- மறு
தாரம் இலாதவ ருண்டு;
சேயின்றி வாழ்பவ ருண்டு- பெருஞ்
செல்வம் இலாதவ ருண்டு;
வாயின்றி ஊமைய ராகிப்- பெரும்
வையத்தில் வாழ்பவ ருண்டு;
நோயின்றி வாழ்பவ ரில்லை- வரும்
நோய்களுக் கும்கணக் கில்லை.

நாயை விரட்டிட வேண்டும்- எனில்
நம்மிடம் கல்லொன்று போதும்.
நோயை விரட்டிட வேண்டும்- எனில்
நூறு மருந்துகள் வேண்டும்.
தீய பரம்பரை நோய்கள்- தரும்
தீமையை வேரொடு வீழ்த்தும்
ஆயுள் மருத்துவத் தொண்டு- செயும்
அன்பராம் நம்செல்வ ராசன்.

தஞ்சை நகர்செல்வ ராசன்- சுவை
தங்கிய செந்தமிழ் நேசன்;
கஞ்சி எழுத்தாளர் அல்லர் -வெறும்
காதல் எழுத்தாளர் அல்லர்;
அஞ்சும் எழுத்தாளர் அல்லர்- தமிழ்
ஆசை எழுத்தாளர் கண்டீர்!
செஞ்சொல் எழுத்தவர் பாதை- பிணி
தீர்க்கும் மருத்துவ மேதை.

கொக்கு விரிக்கும் இறக்கை- நிறம்
கொண்ட மலர்பல உண்டு;
திக்கில் திரிந்திடும் வண்டு -தொடும்
சித்திர நீலங்கள் உண்டு;
பக்கம் இருக்கும் மரத்தின்- இலைப்
பந்தலில் பொன்மலர் உண்டு;
மக்கள் குளிக்கும் குளத்தில் -தமிழ்
மங்கலத் தாமரை உண்டு.

கரிய நிறக்கடல் போலே- சிலர்
கண்விழி வட்டம் இருக்கும்.
நரியின் தலையினைப் போலே- தமிழ்
நாட்டின்வெள வால்தலை கண்டீர்!
குருதி நிறைந்த இதயம் -அது
கூம்பிய தாமரை மொட்டாம்!
அரிய உறுப்பாம் இதயம் -அதை
ஆராய்ந்து சொன்னவன் ஹார்வி.

அருமைச் சதைமலர் மொட்டாம்-அதன்
ஆதிக் கதைகளை யெல்லாம்
உரிமைத் தமிழிலோர் நூலாய்ப் -பிணி
ஓட்டும் மருத்துவ வேலாய்ப்
பெருமைத் திருமகன் தந்தார் -புகழ்
பெற்றிடும் வெற்றிநூல் தந்தார்.
அருமை மருத்துவ நூலாம்- இதை
ஆணிவேர் மாமரம் என்பேன்.

காடு செழித்திட வேண்டும்- எனில்
கார்முகில் பெய்திட வேண்டும்.
நாடு நலம்பெற வேண்டும் -எனில்
நல்ல தலைவர்கள் வேண்டும்.
வீடு விளங்கிட வேண்டும் -எனில்
வேல்விழி மங்கையர் வேண்டும்.
ஏடு புகழ்பெற வேண்டும் -எனில்
இப்படி நூல்தர வேண்டும்.

டாக்டர் எச். செல்வராஜ் அவர்கள் எழுதிய 'இருதய வியாதிகளும் சிகிச்சையும்' என்னும் மருத்துவ நூலுக்கு 1968 ல் வழங்கிய அணிந்துரை.

# பாட்டுத் தோட்டம்

மூத்துப் பூத்த மூதாட்டி ஔவையும்;
அச்சுத்தேர் ஏறிய அதிவீர ராமனும்,.
தேரூரில் பிறந்த தேசிக விநாயகம்
பிள்ளையும், அந்தோணி சாமி பிள்ளையும்,
பாரதி யாரும், பாரதி தாசனும்,
சிறுவர்க்குப் பாட்டுச் சிந்தனை வழங்கிப்
பிறர்க்குவழி காட்டிய பெரிய கவிஞர்கள்

மூத்த தலைமுறை முடிவுற்ற பின்னர்
அடுத்த தலைமுறை அரும்பி மலர்ந்து,
குழந்தைப் பாடல்கள் கொடுப்பதைப் பார்க்கிறோம்
சிறுவர்க் கேற்ற சிறந்த பாடலை
இந்நாளில் வழங்கும் எண்ணற்ற கவிஞருள்
வண்டு தொடும்பூ வண்ணனும் ஒருவர்.

புதுப்புகழ் நீட்டும் புலவர்போல், எழுத்தில்
புதுமையைக் காட்டும் பூவண்ணன் அவர்கள்,
'புலவர்மகன்' என்னும் புத்தகம் எழுதிப்
பரிந்துரை இன்றியே பரிசு பெற்றவர்.
இந்த நாட்டில் இவரே முதன்முதல்
குழந்தை இலக்கிய வரலாறு கொடுத்தவர்.
இப்படிப் பட்டவர், இளைஞர்க் காகப்
படைத்த சுவடியே பாட்டுத் தோட்டம்.

பாட்டுத் தோட்டத்தில் பாரதி இருக்கிறார்.
பாரதி இருப்பதால் பாரதி தாசனும்
இருந்திட வேண்டும். எனினுமவர் இல்லை!

முத்தமிழ் மோனை முதலில் வந்தபின்
எதுகை வராமல் இருப்பது சரியா,
"அன்னை காவிரித் தாயே -உன்னைப்
பொன்னி என்பது ஏனோ?

மண்ணை நன்கு செழிக்கச் செய்து
பொன்னை விளைக்கச் செய்தாய் அதை
எண்ணி எண்ணி உழவர் உனக்கு
இட்ட பெயரோ பொன்னி!"
என்றிவர் காவிரிக் கன்னியைக் கேட்கும்
பாட்டின் அடிகள், பழுத்த புலமையைக்
காட்டும் அடிகள்; கற்பனை வீக்கம்!

பிச்சை இடுவதும் பிச்சை எடுப்பதும்
நமக்கவ மானம்! நாட்டுக்கும் ஊனம்
என்னும் கருத்தில் எழுந்துள்ள பாடல்,
சாத்திரப் பழமைக்குச் சரியான சவுக்கடி.

அறிவியல் கற்பேன்- நான்
அனுதினம் கற்பேன்
பெரிய விஞ்ஞானி- எனும்
பெயரும் வாங்குவேன்.

சந்த்ர மண்டலம் -நான்
சென்று மீளுவேன்
வந்து சந்தரனின்- பல
விந்தை சொல்லுவேன்.

என்னும் அடிகள், இந்தநூற் றாண்டு
மனிதன்விஞ் ஞானியாய் மாற முயல்கிறான்
என்பதை உணர்த்தும் எண்ணச் சுவடுகள்.

வேடன் தாங்கல் போகலாம்
வேடன் தாங்கல் போகலாம்
கோடி கோடி பறவை கண்டு
ஆடிப் பாடி மகிழலாம்
என்று சிறுவர் இடத்தில் உரைப்பதும்,
காரணம் கூறிக் காஞ்சிக் கழைப்பதும்,
பல்லவர் காலத்துக் கல்ரதம் காணப்
புறப்படு மாமல்ல புரத்துக் கென்பதும்
பயன்தரக் கூடிய பயணப் பாடல்கள்.

'நெடுங்கடல் என்பது, நெய்தல் நிலத்தின்
ஓரத்தைக் குறிக்கும் உப்புநீர் விளம்பரம்'
என்றுநான் பாடி இருக்கிறேன். இவரோ,

நீலக் கடல்
நெளியும் கடல்
நிலத்தை விழுங்க நிற்குது!

முத்துக் கடல்
மூத்த கடல்
முதுகில் கப்பல் சுமக்குது!

என்கிறார். நாள்தொறும் ஏங்கும் கடலின்
முதுமையை உணர்த்த மூத்தகடல் என்கிறார்.

குறிப்பிட்ட மூன்றடி கொண்ட பாட்டுநூல்
ஒன்றுநம் நாட்டில் உளதாம். அதன்பெயர்
மூவடி முப்பது, மூவடி முப்பதோ,
இலக்கியக் கிழவர் இடைக்காட னாரின்
அறிவின் அறுவடை! அந்நூல் போலவே.

இலையைப் பறிக்காதே பாப்பா -ஓர்
இலைக்குள்ளும் உணர்வுண்டு; இன்னலும் உண்டு;
இலையைப் பறிக்காதே பாப்பா.

என்றும்; கிளையை முறிக்காதே என்றும்;
சீவ காருண்யச் சிந்தனை ஏறிய
மூவடிப் பாடல் முத்திரை பதித்துளார்.

ஏழைப் புலவர்கள் எதிர்பார்த்து நிற்கையில்,
'இரும் பொறும்' என்றே இழுத்தடிக் காதவன்
இரும்பொறை! அந்தக் கணைக்கால் இரும்பொறை,
விழித்த வீரமும்; மிக்கபே ராற்றலும்;
அரசியல் நுணுக்கமும்; அஞ்சா நெஞ்சமும்;
கொண்டு விளங்கிய கோமகன்! படையொடு
முன்னின் றெதிர்த்த மூவனென் பானைக்
கொன்று வீழ்த்திய குகைப்புலி! களத்தில்
பட்டு வீழ்ந்தோனின் பல்லைப் பிடுங்கிக்
கற்கோட்டை வாயிற் கதவில் பதித்தவன்.

அந்த மன்னனின் சொந்தவர லாற்றைப்
பரிதிமாற் கலைஞரும் பாடலாய் வடித்துளார்.
இந்தக் கவிஞரும் இந்நூலில் தந்துளார்.

இருவரும் தந்துளர் என்ற போதிலும்,
இவரது பாடலில் இருக்கும் எளிமை
அவரது பாடல் அடிகளில் இல்லை.

மணல்வீடு கட்டி மகிழும் சிறார்க்குப்
பச்சை மரத்தின் உச்சியைக் காட்டி,
அதற்குப் பின்னர் அம்புலி காட்டல்போல்,
அரும்புச் சிறுவரின் அறிவுநிலை யறிந்து,

கண்கவர் காட்சிக் கவிதையை முதலிலும்,
முழுக்கதைப் பாடலை நூலின் முடிவிலும்
வைத்துள்ள போக்கு வரவேற்கத் தக்கது.

உள்ளபடி சொல்கிறேன். ஒவ்வொரு பாடலும்
கொள்ளுபடி ஆகுமே அன்றிக் கொஞ்சமும்
தள்ளுபடி ஆகாது சாரம் இருப்பதால்!

இலக்கியம் கற்றவர் இயற்றிய இந்நூல்
முழுநிலவு போன்றது, மொட்டுச் சிறுவரை
நல்லவ ராகவும் வல்லவ ராகவும்
ஆக்கத் தக்கநூல்; அறியாமை இருளைப்
போக்கக் கூடிய புத்தக வெளிச்சம்.
வளரட்டும் இந்த வெளிச்சம்
வளரட்டும் இவர்புகழ் வரலாறு போலவே!

---

பூவண்ணன் எம்.ஏ., அவர்கள் எழுதிய 'பாட்டுத் தோட்டம்' என்னும் குழந்தைப் பாடல்கள் தொகுப்பு நூலுக்கு 1970 ல் வழங்கிய அணிந்துரை.

# கட்டில் வீணை

சினத்திலன்றி அமைதியிலே வீரத்தின்
வரலாறு தெரிவ தில்லை;
மனத்திலன்றி விழிகளிலே எண்ணங்கள்
மலர்வதில்லை; மங்கை மாதர்
தனத்திலன்றிச் சந்தனத்தில் பால்சுரந்து
விடுவதில்லை; சத்தில் லாத
நுனிப்பாட்டு நூல்கற்றோர் புத்தகத்தில்
புதுமைகளே நுழைவ தில்லை.

மின்னிடத்தில் ஒளியுண்டு; சுனைநீரில்
தெளிவுண்டு; மேன்மை மிக்க
பொன்னிடத்தில் பொலிவுண்டு; பூவிடத்தில்
மணமுண்டு; புதுமை வாணன்
தன்னிடத்தில் என்திறமை சரிபாதி
உண்டென்பேன். தமிழ்நூல் கற்றோர்
என்னிடத்தில் எதிர்பார்க்கும் செய்யுள்நயம்
இக்கவிஞர் இடத்து முண்டு.

புதுக்குழந்தை பிறந்தாலும், புதுக்கவிதை
பிறந்தாலும் பொருத்த மென்னும்
அதற்குரிய உறுப்புநலன் அத்தனையும்
நன்றாக அமைதல் வேண்டும்.
முதற்கவிதை நூல்வழங்கும் இக்கவிஞர்
அதற்குரிய முறையில் இங்கே
கதைக்கவிதை புனைந்துள்ளார் கடைசிவரை
முழுத்திறனைக் காட்டி யுள்ளார்.

பங்கிட்டுத் தேன்முத்தம் தரும்பெண்ணைப்
பற்றியிவர் பாடும் பாடல்,
செங்கரும்புக் கொக்கோகம் அல்லாமல்
வேறென்ன? தெளிந்த சொற்கள்
அங்கங்கே அரும்பாகி அந்திமுல்லைப்
பூவாகி அதனுள் செந்தேன்
பொங்குவதைக் காணுகின்றேன் கவிக்கட்டில்
வீணையெனும் புத்த கத்தில்.

தொகைதொகையாய்ப் பாட்டெழுதி இந்நாட்டில்
சிலரிங்கே தோற்கும் நாளில்
வகைவகையாய்ப் பாட்டெழுதி வெற்றிமிகப்
பெறும்புதுமை வாணன் நூலில்,
புகழ்சேர்க்கும் எண்ணங்கள் இருப்பதனைக்
கண்டுள்ளம் பூரிக் கின்றேன்.
முகம்சேர்க்கும் முத்தங்கள் கசக்குமெனக்
சொல்லுதற்கு முடியா தன்றோ?

---

கவிஞர் புதுமை வாணன் அவர்கள் எழுதிய 'கட்டில் வீணை' என்னும் கவிதை நூலுக்கு 1975 ல் வழங்கிய அணிந்துரை.

# சிரித்து மகிழுங்கள்

விழாதவர்கள் சிலருண்டு; கொண்ட கொள்கை
விடாதவர்கள் சிலருண்டு; விடிந்த பின்னும்
எழாதவர்கள் சிலருண்டு; பசித்தோர்க் கன்னம்
இடாதவர்கள் சிலருண்டு; கோயில் சென்று
தொழாதவர்கள் சிலருண்டு; பருவப் பெண்ணைத்
தொடாதவர்கள் சிலருண்டு; விம்மி விம்மி
அழாதவர்கள் இவ்வுலகில் யாரு மில்லை.
அகிலத்தில் சிரிக்காதார் எவரு மில்லை.

எரிப்பதற்கும் புதைப்பதற்கும் கார ணங்கள்
எத்தனையோ இங்குண்டு. நாமெல் லோரும்
சிரிப்பதற்கும் அழுவதற்கும் கார ணங்கள்
சிலவுண்டு, சிலசமயம் பலவும் உண்டு.
நெருக்கடிகள் வரும்போதும், கொடிய துன்ப
நிகழ்ச்சிகளால் தாக்குற்றுக் கலங்கும் போதும்,
சிரிப்பதற்கு முயன்றாலும் முடிவ தில்லை.
சிலர்சிரிப்பில் வஞ்சகமே நுழைவ தில்லை.

முன்கோபக் காரனையும், அக்பர் என்னும்
மொகலாய மன்னனையும் பீர்பால் என்பான்
அன்றாடம் சிரிக்கவைத்தான். நாட்டு மக்கள் .
அனைவரையும் நகைச்சுவையால் மகிழ வைத்தான்.
தென்னாலி ராமனென்பான் தனது பேச்சுத்
திறத்தாலே அனைவரையும் சிரிக்க வைத்தான்.
நான்றாக நாமெல்லாம் சிரிக்க வேண்டும்.
நம்மைவிட வெளிநாட்டார் சிரிக்கின் றார்கள்.

அரிப்பூட்டும் கொக்கோகம் எழுதி னானே
அன்னவனால், அவனெழுத்தால், நெஞ்சில் காம
நெருப்பூட்ட முடிந்ததன்றிச் சிரிக்க வைக்க
நிச்சயமாய் ஒருபோதும் முடிய வில்லை.
சிரிப்பூட்டிச் சிந்திக்க வைப்ப தற்குத்
திறன்வேண்டும், அத்திறமை பலருக் கில்லை.
சிரிப்பூட்டும் துணுக்குகளை எழுது தற்கும்
திறன்வேண்டும். அத்திறமை சிலர்க்கே உண்டு.

ஆனந்த விகடனிங்குத் தோன்று முன்பே
ஆயிரத்தெண் ணூற்றெண்பத் தைந்தில் தோன்றி
மானிடர்க்கு நகைச்சுவையை வழங்கி வந்த
மகாவிகட தூதனெனும் இதழைப் போன்று
தேனொழுகும் துணுக்குகளை வாரா வாரம்
சிறப்பாகத் தருதற்கோர் ஏடு வேண்டும்.
வானம்தான் இருக்கிறது; முகில்தான் இல்லை!
வான்கோழி இருக்கிறது; மயிலைக் காணோம்!

அகச்சுவைநூல் அதிகமுண்டு நமது நாட்டில்
ஆயினும்நம் நாட்டினிலே மிகுதி யாக
நகைச்சுவைநூல் தோன்றவில்லை; மேலை நாட்டில்
நாள்தோறும் நகைச்சுவைநூல் தோன்றக் கண்டும்,
புகைச்சல்வரும் கீர்த்தனையும், பிறருள் ளத்தைப்
புண்படுத்தும் கட்டுரையும் தீட்டு கின்றோம்.
சிகிச்சைசெய்யும் நகைச்சுவைநூல் தோன்றா விட்டால்
தேசத்தில் அழுகுரலே அதிக மாகும்.

ஈசனையும் இறைவியையும் பற்றி முன்னோர்
எழுதிவைத்த பாடல்களைத் தொகுத்த ளித்தால்,
பூசனைக்கும் பூசாரிக் கூட்டத் திற்கும்
புராணிகர்க்கும் அந்நூற்கள் உதவு மன்றித்
தேசத்தில் முன்னேற்றம் காண்ப தற்குச்
சிறிதுமுத வாதன்றோ? அதனால், கல்வி
வாசனையும் யோசனையும் உடைய சீனி
வாசனொரு நகைச்சுவைநூல் வழங்கி யுள்ளார்.

புவிபுகழும் மெக்காலே என்பான் கையில்
புத்தகந்தான் எப்போதும் இருக்கு மென்பர்.
அவனைப்போல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே
ஆராய்ச்சி செயும்டாக்டர் சீனி வாசன்,
சுவைமிகுந்த துணுக்குகளைத் தேர்ந்தெ டுத்துத்
தொகுத்துள்ளார்; திறனாய்வும் இதில் சேர்த்துள்ளார்.
இவருடைய திறனாய்வும் இந்த நூலும்;
இந்நாட்டுக் கிப்போது மிகவும் தேவை.

இப்படியோர் புத்தகத்தை நமது நாட்டில்
எல்லோரும் தொகுத்திடலாம். தொகுத்த போதும்,
செப்பனிட்ட துணுக்குகளுக் கேற்ற வாறு
சிறப்பான தலைப்புகளைத் தருவ தற்கும்;
அப்படியே தரினும்நகைச் சுவையைப் பற்றி
அரியதொரு திறனாய்வு செய்வ தற்கும்;
கொப்பளிக்கும் தனித்திறமை வேண்டு மன்றோ?
குருத்தோலை எழுத்தரிதற் கெங்கே போவர்?

சிரித்துமகி ழுங்களெனும் இந்த நூலைத்
திறந்தாலே சிரிப்புவரும். இதைவா சித்தால்,
வருத்தமெலாம் பறந்தோடும். இலக்கி யத்தின்
வளர்ச்சிக்கும் கைகொடுக்கும். பக்கம் தோறும்,
அருத்தமுள்ள துணுக்குகளும், இளைஞர்க் கெல்லாம்
ஆசைதரும் துணுக்குகளும் நிறைந்த இந்நூல்,
மருத்துவர்க்கும் மருந்துதரும். நமது நாட்டு
மக்களிதை அவசியமாய்ப் படிக்க வேண்டும்.

---

பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன் எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி. அவர்கள் எழுதிய 'சிரித்து மகிழுங்கள்' என்னும் நூலுக்கு 1975 ல் வழங்கிய அணிந்துரை.

# சந்தனக் கிண்ணம்

மேதினியோர் பாராட்டும் 'உலக நீதி'
விளக்கத்தைத் தந்தானோர் உலக நாதன்.
காதலெனச் சுவையூட்டும் தமிழில், 'கன்றும்
கனியுதவும்' தந்தானோர் உலக நாதன்.
சாதிகளின் வேரறுக்கும் 'இருபு கீதை'
தமிழர்க்குத் தந்தானோர் உலக நாதன்.
ஆதிமொழி யாம்தமிழில் புதுநூல் ஒன்றை
அளித்துள்ளார் நமக்கிந்த உலக நாதன்.

சந்தனத்தை வைப்பதற்குக் கிண்ண முண்டு;
தயிரதனை வைப்பதற்குப் பானை யுண்டு;
வெந்தயத்தை வைப்பதற்குக் கலய முண்டு;
வெற்றியினை வைப்பதற்குத் திசைகள் உண்டு;
சிந்தனைச்சந் தனக்கிண்ணம் என்னும் இந்நூல்,
தேசத்தின் வளர்ச்சிக்கு வழிகள் காட்டிப்
பந்தயத்தில் வெற்றிபெறும்! எனவே இந்தப்
பாடலுக்கும் புகழுலகில் வரவேற் புண்டு!

---

'மலேசியக் கவிஞர்' ஐ. உலகநாதன் அவர்கள் எழுதிய 'சந்தனக் கிண்ணம்' என்னும் கவிதை நூலுக்கு 1966 ல் வழங்கிய அணிந்துரை.

# ஒற்றையடிப் பாதை

ஆணிப்பொன் போற்சிறந்து விளங்கி நின்ற
அமிர்தகவி ராயர்யார்? என்று கேட்டால்,
நாணிக்கண் புதைத்தலெனும் ஒருது றைக்கே
நானூறு பாட்டெழுதிப் பிறரை வென்ற
மாணிக்கப் புலவரவர். செய்த நன்றி
மறவாத புலவரவர். அவர்பேர் தன்னைத்
தூணுக்குத் தூணெழுதி வைக்கச் சொல்லும்
தோழர்களுள் ஒருதோழர் சோதி வாணன்.

வான்மதிக்கும் செங்கதிரைப் போன்று, தோகை
மயில்மதிக்கும் மேகத்தைப் போன்று, நாட்டில்
நான்மதிக்கும் கவிஞர்களுள் ஒருவ ரான
நற்கவிஞர் சொற்கவிஞர் சோதி வாணன்,
ஊன்மதிக்கும் உயிர்போன்று சிறந்த தான
ஒற்றையடிப் பாதையெனும் கவிதை நூலைத்
தேன்மதிக்கும் செந்தமிழில் தீட்டி யுள்ளார்.
தீட்டியிதில் புதுமைபல காட்டி யுள்ளார்.

நதிவழியில் ஓடங்கள் போதல் போலும்,
நல்வழியில் நடந்துசெல்வோர் போலும், செய்யுள்
விதிவகையில் பாடல்பல எழுதி, நல்ல
வெற்றிக்கு வழிதேடி யுள்ளார். மேலும்
புதுவகையில் பாடல்பல தீட்டிக் காட்டிப்
புகழ்சேர்க்க முயன்றுள்ளார். தொண்டை தன்னில்
சதைவளர்ந்தால் என்னாகும்? குடத்தி லுள்ள
தண்ணீரில் எண்ணெயையேன் கலக்க வேண்டும்?

நீதிநெறி விளக்கமெனும் பழைய நூலில்
நீதிகளே அதிகமுண்டு. சோதி வாணன்
சாதனைக்கோர் அடையாள மாக நிற்கும்
சத்தான இந்நூலில், இந்நூற் றாண்டின்
காதல்நெறி விளக்கங்கள் அதிக முண்டு!
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் பாட லுண்டு.
நூதனங்கள் இக்கவிதை நூலி லுண்டு.
நுணுக்கமுள்ள பாடல்பல இதிலே உண்டு.

இச்சைதரும் இளம்பருவக் காதல் வாழ்க்கை
இனிப்பதுபோல் இனிக்குமிந்தக் கவிதை நூலில்,
பச்சரிசிச் சிந்தனையோ, கசப்பு மிக்க
பாகற்காய்ச் சிந்தனையோ சிறிது மில்லை.
மெச்சுகின்றேன் மெச்சுகின்றேன் நூலி லுள்ள
மின்னலெனும் கவியைமிக மெச்சு கின்றேன்.
நிச்சயமாய் இந்நூலின் மூல மாக
நீண்டபுகழ் பெறட்டுமென வாழ்த்து கின்றேன்.

---

பேராசிரியர் இரா. சோதிவாணன் எம். ஏ., பி.எல்., அவர்கள் எழுதிய 'ஒற்றையடிப் பாதை' என்னும் கவிதை நூலுக்கு 1976 ல் வழங்கிய அணிந்துரை.

# சுரதாவின்
# திரைப்படப் பாடல்கள்
# (சில)



# எல்லாம் இன்பமே

அமரன் : எல்லாம் இன்பமே என்றுமே (எல்லாம்)
நீலவானம் தனிலே
நீந்தும் அன்னநடை அதனிலே
நெளிந்தும் நாகம் செல்லும் அசைவிலே
தாவி ஓடும் புள்ளிமான் விழியிலே
பேரழகைக் கண்டு ஆனந்தமும் கொண்டு
பேசி மகிழ்ந்து வாழும் நேரம் (எல்லாம்)
விழியின் புருவம்போல் வளைந்தவில் ஏந்தி
வீரன் புரியும் போரில் வெற்றி காண்பதும்

காமவல்லி : வேலைப் போன்ற வடிவுள்ள குன்றில் மயில்
விசிறிபோல் தோகை விரித்து ஆடுவதும்

அமரன் : குவிந்த கைபோன்ற தாமரை அரும்பிலே

காமவல்லி : மீனைத் தாலாட்டும் நீலக்கடலிலே

அமரன் : சிற்பியின் சிலைதனிலே

காமவல்லி : தவயோகியின் நிலைதனிலே

அமரன் : அறிவிலே

காமவல்லி : அழகிலே

அமரன் : மாங்கனியின் உள்ளே
வண்டுபோல் மயங்கி

காமவல்லி : காதல் புரிவதும் கலையே
கடவுள் இன்பம் அதுவே அதற்
கேற்ற நேரம் இதுவே. (எல்லாம்)

---

படம் : அமரகவி (1952)
தயாரிப்பு : நாகூர் சினி புரொடக்ஷன்ஸ்
பாடியவர்கள் : தியாகராஜ பாகவதர், கானசரஸ்வதி.
இசையமைப்பாளர் : ஜி. ராமனாதன்.

# துணை நீயே

துணை நீயே! தேவத்தாயே!
அகில லோக ஜோதி நீயே!
கன்னி மரியே! சாட்சி நீயே! (துணை)

பழியை எண்ணி வழியும் கண்ணீர்
பாதம் சேர்ந்தும் சோதனை ஏன்?
கனவிலும் நான் களங்கம் அறியேன்
பெரும் தீமீதிலே ஈ மொய்ப்பதுண்டோ? (துணை)

சதிகாரன் இவனையே நம்பியே
மதிமோசம் போனேனே வாழ்விலே
பெருங் கூண்டில் கிளியைப்போல் ஆனேனே
நீல வான்மீதிலே நிழல் படிவதுண்டோ? (துணை)

---

படம் : ஜெனோவா (1953)
பாடியவர் : பி. லீலா
தயாரிப்பு : சந்திரா பிக்சர்ஸ்
இசையமைப்பாளர் : எம். எஸ். ஞானமணி

# கண்ணில் வந்து மின்னல் போல்

ஆண் : கண்ணில் வந்து மின்னல் போல்
காணுதே -இன்பக்
காவியக் கலையே ஓவியமே!
செழுங் கனிபோல சுவைதரும் மாமணி- என்
பாடிடும் பூங்குயிலே இன்பக்
காவியக் கலையே ஓவியமே (கண்ணில்)

பெண் : சுடர் -மின்னல் கண்டு தாழை
மலர்வது போலே
உனைக்கண்டு உள்ளமே மகிழ்ந்தேனே

ஆண் : நீல- வானம் இல்லாத ஊரே இல்லை
உலகினில் மழையின்றி ஏதுமில்லை
அமுதே உனையன்றி வாழ்வே இல்லை
அன்பே இது உண்மையே- இன்பக்
காவியக் கலையே ஓவியமே (கண்ணில்)

பெண் : அங்கும் இங்கும் விளையாடி
அலைபோல உறவாகி
ஆனந்தம் காணும் நேரம் தானே
உள்ளத்தின் ஆசையே
உன்னை உன்னைத் தேடுதே

ஆண் : கொஞ்சிப் பேசும் கிளியே- நல்
இன்பம் தரும் ஜோதியே
மானே! மலரினும் மெல்லியது காதலே!

பெண் : மகிழ்வோம் நாமே

ஆண் : புதுமை வாழ்விலே- இன்பக்
காவியக் கலையே ஓவியமே! (கண்ணில்)

---

படம் : நாடோடி மன்னன் (1958)
தயாரிப்பு : எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன், ஜிக்கி
இசையமைப்பாளர் : எஸ். எம். சுப்பையா நாயுடு

# வருக வருக வேந்தே

வருக வருக வேந்தே
தலையான கலைஞானம்
தனைப் போற்றும் தலைவா நீ (வருக)
வீரம் உறங்காத தென்னாடு தனையாளும்
வேந்தே நீ வருகவே
பார்புகழும் உதய சூரியனே
பசியின்றிப் புவிகாக்கும் பார்த்திபனே (வருக)
முத்தமிழும் நாவில் பயிராகுமே- தமிழ்
மொழியே உன்றன் உயிராகுமே
எத்திசையும் வெற்றி கொண்டவனே
ஈந்து ஈந்துகரம் சிவந்தவனே (வருக)
வாகை மாலைதரும் மாமணம் வருகவே
மலைமீது தோன்றும் முழுநிலவு போலே- யானைத்
தலைமீது வெண்குடை பிடிக்கும் தலைவனே
வருக வருக வேந்தே- எங்கள்
திராவிடப் பூங்காவில் மலர்ந்த
வேந்தே நீ வருகவே (வருக)

---

படம் : நாடோடி மன்னன் (1958)
தயாரிப்பு : எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்
பாடியவர்கள் : ஜிக்கி குழுவினர்
இசையமைப்பாளர் : எஸ். எம். சுப்பையா நாயுடு

# எண்ணமெல்லாம்

எண்ணமெல்லாம் ஓரிடத்தையே நாடுதே
கண்ணிரண்டும் ஓர்முகத்தையே தேடுதே- என்

தேனேந்தும் மலராகி வானேந்தும் நிலவாகி
சிந்தை கவர்ந்திடுதே- என் மணிவிழி மயங்கிடுதே
செங்கதிர்ச் சுடர்போலே
என்கரம் நீண்டிருந்தால்- அந்தச்
சிங்காரச் சிலைதனை இங்கிருந்தே தொடுவேன்-என் (எண்ணம்)

மனம் விரும்பும் காட்சியைக் கனவில் கண்டாலும்
மையல் தீருமா? நுரைதின்று பசியாறுமா?
மாமலரின் நிழல்தான் மணம் வீசுமா? -முத்து
மாலையின் நிழல்தான் விலைபோகுமா?- என் (எண்ணம்)

நெய்யும் தறியில்நூல் நெருங்குவது போலே
நேச முகமிரண்டும் நெருங்குமா?
பிரிந்த உறவும் திரும்புமா? -என் (எண்ணம்)

---

படம் : திருமணம் (1958)
தயாரிப்பு : வலம்புரி பிக்சர்ஸ்
பாடியவர் : டி. எம். சௌந்தரராஜன்
இசையமைப்பாளர் : எஸ். எம். சுப்பையா நாயுடு

# அமுதும் தேனும் எதற்கு

அமுதும் தேனும் எதற்கு? -நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு -வான் (அமுதும்)

அருவிதரும் குளிர்நீர் அன்பே இனிமேல்
அதுவும் சுடுநீர் ஆகும் நமக்கு- வான் (அமுதும்)

நிலவின் நிழலோ உன்வதனம்- புது
நிலைக்கண் ணாடியோ மின்னும் கன்னம்
மலையில் பிறவா மாமணியே- நான்
கொய்யும் கொய்யாக் கனியே -வான் (அமுதும்)

விழியாலே காதல் கதைபேசு -மலர்க்
கையாலே சந்தனம் பூசு -தமிழ்
மொழிபோலே சுவையூட்டும் செந்தேனே
உடல்நான் உயிர்நீ தானே! -வான் (அமுதும்)

---

படம் : தைபிறந்தால் வழிபிறக்கும் (1958)
தயாரிப்பு : அருணாசலம் பிக்சர்ஸ்
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்
இசையமைப்பாளர் : கே. வி. மகாதேவன்

# வச்சிருக்கேன் நான் வச்சிருக்கேன்

வச்சிருக்கேன்- நான்
வச்சிருக்கேன்- ரொம்ப
ரகசியமாக வச்சிருக்கேன்
மருவு மருக்கொழுந்து வச்சிருக்கேன்
மனசுக்குள்ளே உன்னை வச்சிருக்கேன் (வச்சி)

மாமரச் சோலையிலே
மத்தாப்பு வெளிச்சத்திலே
மயங்கி விட்டேன் உன்னைக் கண்டு
மன்மதனே ஆசை கொண்டு (வச்சி)

கொம்பின் அருகில் கொடியிருக்கு
கொடியின் மேலே மலரிருக்கு
மலருக்குள்ளே நல்ல மதுவிருக்கு
மனமிருந்தால் தான் வழியிருக்கு (வச்சி)

நட்டுவச்ச கல்லைப்போலே நிக்காதே- இந்தப்
பட்டுப்பூச்சி நெஞ்சை வேக வைக்காதே
கொத்தும் கிளிதான் நீ எனக்குக்
கோவைப் பழந்தான் நான் உனக்கு (வச்சி)

---

படம் : தலைகொடுத்தான் தம்பி (1959)
பாடியவர் : ஜமுனா ராணி
தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
இசையமைப்பாளர் : விசுவநாதன் & ராமமூர்த்தி

# ஆடி அடங்கும் வாழ்க்கையடா

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடிநிலமே சொந்தமடா
முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா -கண்
மூடினால் காலில்லாக் கட்டிலடா (ஆடி)

பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம் (ஆடி)

சிரிப்பவன் கவலையை மறக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான் (ஆடி)

தொகுப்பார் சிலரதைச் சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை
வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை (ஆடி)

---

படம் : நீர்க்குமிழி (1964)
தயாரிப்பு : திருமலை பிக்சர்ஸ்
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்
இசையமைப்பாளர் : வி. குமார்

# வசந்தகாலம் வருமோ?

வசந்த காலம் வருமோ? நிலை மாறுமோ?
வைகை பெருகி வருமோ? குறை தீருமோ? (வசந்த)

ஆசை அரும்பு மலராகி -நெஞ்சில்
ஆடும் நினைவு கனியாகி
மடி மீதிலே விளை யாடவே
கொடி போலவே உற வாடவே
எனையே தேடி (வசந்த)

வீணை இருந்தும் பயனேது? வந்து
மீட்டும் வரையில் இசையேது?
குயில் கூவுமோ மழை நாளிலே?
கயல் நீந்துமோ சுடும் நீரிலே?
எனையே தேடி (வசந்த)

---

படம் : மறக்க முடியுமா? (1966)
தயாரிப்பு : மேகலா பிக்சர்ஸ்
பாடியவர்கள் : ஜேசுதாஸ், பி. சுசீலா
இசையமைப்பாளர் : பி. ராமமூர்த்தி

# நெருங்கி நெருங்கிப் பழகும்போது

லலாலாலா லல்லாலாலா!
லல்லல்லா லாலா!...
நெருங்கி!
ஹா நெருங்கி!
நெருங்கி நெருங்கிப் பழகும் போது
நெஞ்சம் ஒன்றாகும்
நிழலும் நிழலும் சேரும்போது
இரண்டும் ஒன்றாகும் (நெருங்கி)
பொன்னைக் காட்ட வேண்டுமென்றால்
உன்னைக் காட்டலாம்
உன்னைக் காட்ட வேண்டுமென்றால்
ஒளியைக் காட்டலாம்
கண்ணிலிருந்து இதயம் வரையில்
காதல் போராட்டம்
கரையிலிருந்து கட்டில் வரையில்
பருவத் தேரோட்டம் (நெருங்கி)
நிலவு நம்மை எட்டிப் பார்க்கும் நேரமல்லவா?
நீயும் நானும் கொண்ட காதல் அமுதமல்லவா?
தலையைக் காட்டும் இந்தநிலவு தலைமை தாங்கட்டும்.
தழுவும்போது வீசும் தென்றல் விலகி ஓடட்டும்!
(நெருங்கி)

---

படம் : நேற்று இன்று நாளை (1975)
தயாரிப்பு : அமல்ராஜ் பிக்சர்ஸ்
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராசன், பி. சுசீலா
இசையமைப்பாளர் : கே. வி. மகாதேவன்

# விதைகள்

# நம் நாடு

மிகப்பெரிய தேசந்தான் நமது தேசம்.
வீரத்தின் விளைநிலந்தான் எனினும் சாதித்
தொகைக்கணக்கால், சோம்பேறித் தனத்தால், நீண்ட
தூக்கத்தால் பொறாமையினால் தொன்று தொட்டுப்
பகைப்பெருமை பேசியதால், அண்ணன் தம்பி
படையெடுப்பால், சிற்றின்ப வெறியால், நன்கு
வகுத்தமுறை வழுவியதால் வீழ்ச்சி யுற்றோம்.
வந்தாரை ஆளவிட்டோம். அடிமைப் பட்டோம்.

சிற்றரசர் பேரரசர்க் கடங்கி, வெள்ளைச்
சீமையர்க்கு யாவருமே அடங்கி, ஈரம்
வற்றியதோர் பனையோலைச் சுருளைப் போல
மனம்சுருண்டு நம்மவர்கள் இருந்த நாளில்,
கற்றவர்கள் கூடியிங்கோர் இயக்கம் கண்டு
கனைத்தொழுந்து வெள்ளையரை எதிர்க்க லானார்.
கற்றவரும் மற்றவரும் வளர்த்த காங்ரஸ்
கட்சியதன் உச்சியிலே காந்தி நின்றார்.

நோயிருந்து வாட்டுதல்போல், முள்ளின் உச்சி
நுனியிருந்து குத்துதல்போல் குத்தும் ஆட்சி
சாயும்வரை யாம்சாய மாட்டோம், வெள்ளைச்
சழக்கர்களின் துப்பாக்கித் தும்மல் இங்கே
ஓயும்வரை யாமினிமேல் ஓய மாட்டோம்
ஒழித்திடுவோம் இல்லையெனில் ஒழிவோம் என்றே
தாயகத்தில் குரல்கொடுத்தோம். காந்தி யாரின்
தலைமையில்நாம் விடுதலையை முயன்று பெற்றோம்.

பெற்றுவிட்டோம் விடுதலையை எனினும், மேலும்
பெறத்தக்க உரிமைகளைப் பெறுதல் வேண்டும்.
சற்றுவிட்டுக் கொடுத்தாலும் ஆங்காங் குள்ள
சதிகாரர் அதிகாரி யாகி, நெல்லைக்
குற்றிவிட்ட உமியைப்போல் ஒதுக்கித் தள்ளிக்
குடைபிடிக்கும் ஆட்சியினை நிலைக்கச் செய்வர்.
ஒற்றுமைக்கும், எல்லார்க்கும் எல்லாம் வந்தே
ஒட்டுதற்கும் பொதுவுடைமைப் புரட்சி வேண்டும்.

இல்லையென்றும், இல்லையென்ற கார ணத்தால்
ஏழையென்றும், எளியரென்றும், வறுமை என்னும்
தொல்லைவந்து வாட்டுவதால் புழுப்போல் நாங்கள்
துடித்துக்கொண் டிருக்கின்றோம் என்றும்; யாரும்
சொல்லுதற்கு வழியின்றிச் செய்ய வேண்டின்
சுடச்சுடநாம் புதுமாற்றம் காண வேண்டும்.
நல்லவர்கள் இக்கருத்தை ஏற்பர்; நாட்டின்
நலங்கருதார் எதிர்த்தாலும் முடிவில் தோற்பர்.

தோள்வளர்ச்சி ஆடவர்க்கும், ஒவ்வோர் நாளும்
தொழில்வளர்ச்சி நாட்டுக்கும் தேவை யாகும்.
ஆள்வளர்ச்சி அடைவதனால் ஆவ தென்ன?
அவ்வளர்ச்சி வெறுஞ்சதையின் வளர்ச்சி தானே!
வாள்வளர்ச்சி எதற்காக இனிமேல்? விண்ணில்
வளர்மதியைத் தொடும்வளர்ச்சி யன்றோ வேண்டும்?
தேள்வளர்ச்சி மனப்பான்மை வளரு மாயின்
தேசத்தில் மோசந்தான் மோட்ச மாகும்.

விழித்தால்தான் பொருள்தெரியும்; வயலில் நெல்லை
விதைத்தால்தான் அதுவிளையும்; பத்தில் ஐந்தைக்
கழித்தாலும் வகுத்தாலும் குறையும்; மாந்தர்
கவலைக்கோர் கவலைமருந் தாவ தில்லை.
இழைத்தால்தான் நூல்கிடைக்கும் என்ப தாலே
இழைக்கின்றோம் பஞ்சுதனை; எந்த நாடும்
உழைத்தால்தான் முன்னேற முடியு மன்றி
உபதேசத் தால்தேசம் உயர்வ தில்லை.

# முதுமை

படிப்படி யாகத் தோன்றும்
பருவங்கள் இல்லை யென்றால்,
அடிப்படை இளமை இல்லை.
அவ்வாறே முதுமை இல்லை.
எடுப்பாக விளங்கி நிற்கும்
இளமையை, முதுமை தன்னைத்
தடுக்கவோ, வேண்டா மென்று
தள்ளவோ முடிவ தில்லை.

ஓய்ந்தவர் முதுமை யெல்லாம்
உறக்கமாம்; கருமை பெற்ற
கூந்தலின் முதுமை யெல்லாம்
கொக்குவெண் நரையாம்; செல்வம்
தேய்ந்தவர் முதுமை யெல்லாம்
தீராத வறுமை யாகும்.
மாந்தரின் முதுமை யெல்லாம்
மரணத்தின் இளமை யாகும்.

# சிக்கனம்

உரைநடையின் சிக்கனந்தான் கவிதை; ஓங்கும்
உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம்; காதல்
வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம்;
மாளிகையின் சிக்கனந்தான் குடிசை யாகும்;
உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம்;
உணவுகளின் சிக்கனந்தான் பங்கீ டாகும்;
அரசியலின் சிக்கனந்தான் இரண்டே கட்சி;
அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூற்கள்.

எப்படியும் வாழ்வதுதான் வாழ்க்கை என்றே
எண்ணுபவன் பொறுப்பற்ற மனித னாவான்.
இப்படித்தான் நாம்வாழ வேண்டு மென்றே
எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்தோ னாவான்.
உப்பாக இருந்தாலும், நீரா னாலும்,
உபயோகப் படுத்துவதில் அளவு வேண்டும்.
அப்படிநாம் அளவறிந்து பயன் படுத்தும்
அதன்பெயரே சிக்கனமாம் அறிந்து கொள்வீர்.

ஆவிக்கு வேண்டுமெனில் அங்கம் வேண்டும்;
அன்புக்கு வேண்டுமெனில் உள்ளம் வேண்டும்;
பூவுக்கு வேண்டுமெனில் வாசம் வேண்டும்;
புனலுக்கு வேண்டுமெனில் ஓட்டம் வேண்டும்;
சேவிக்க வேண்டுமெனில் பக்தி வேண்டும்.
சேமிக்க வேண்டுமெனில் புத்தி வேண்டும்;
சேவிக்க பக்தியெனில், பொருளைப் போற்றிச்
சிறப்படையச் சிக்கனந்தான் முதலில் வேண்டும்.

உருண்டோடிக் கொண்டிருக்கும் கூழாங் கல்லில்
ஒருபோதும் பாசிவந்து படிவ தில்லை.
வரவுக்குத் தக்கபடி செலவு செய்து
வருவோரைத் துன்பங்கள் தொடுவ தில்லை.
சிரமங்கள் பெரும்பாலும் குறைய வேண்டின்
சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும். வாழ்வில்
பரபரப்பாய், மினுமினுப்பாய் வாழ்வ தாலே
பயனில்லை; நாட்டுக்கும் நன்மை இல்லை.

பேரோடும் புகழோடும் வாழ்வ தற்குப்
பேரறிவே துணைபுரியும்; நாமெல் லோரும்
சீரோடும் சிறப்போடும் வாழ்வ தற்குச்
சிக்கனமே துணைபுரியும்; பகட்டு வாழ்க்கை
நீராவி போன்றதுவாம்; சிக்க னந்தான்
நீரூற்றைப் போன்றதுவாம்; சிக்க னத்தை
வேரோடு பெயர்த்தெறிந்து வறுமை யுற்று
விக்கிவிக்கி அழுதவர்கள் பலபே ருண்டு.

சிக்கனமாய் வாழாமல் மிகுதி யாகச்
செலவழித்துக் கவிகம்ப தாசன் கெட்டான்.
பக்குவமாய் வாழ்ந்தாலும் கடைசி நாளில்
பாகவதர் வறுமையுற்று வாட லானார்.
முக்கியமாய் இவர்களெல்லாம் சிக்க னத்தை
முறையாகப் பின்பற்ற மறந்த தாலே
இக்கதிக்கிங் காளானார். இல்லை யென்றால்
ஏனிவர்கள் வறுமையுற்று வாட வேண்டும்?

தாராள மனப்பான்மை என்று சொல்லித்
தண்ணீர்போல் பணத்தையெலாம் செலவுசெய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம். வாழ்வில்
சிக்கனந்தான் ஒருவனுக்குச் சிறந்த சொத்தாம்.
சீராகச் செட்டாக ஒவ்வோர் நாளும்
சிக்கனமாய்ப் பெரியார்போல் வாழ்ந்து வந்தால்
பாராங்கல் மீதில்விழும் மழைநீர் போலப்
பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும்.

# கூட்டலும் கழித்தலும்

விண்ணின் கூட்டல் பகலிரவு,
விரும்பும் கூட்டல் முதலிரவு,
மண்ணின் கூட்டல் இவ்வுலகம்
மணலின் கூட்டல் பாலைவனம்,
பெண்ணின் கூட்டல் மகப்பேறு,
பேச்சின் கூட்டல் சொற்பொழிவாம்!
எண்ணின் கூட்டல் பலகோடி,
எழுத்தின் கூட்டல் உயிர்நாடி.

நெல்லின் கழித்தல் பதராகும்,
நெருப்பின் கழித்தல் புகையாகும்,
கல்லின் கழித்தல் மண்ணாகும்,
கடலின் கழித்தல் தீவாகும்,
பல்லின் கழித்தல் அழுக்காகும்,
பகலின் கழித்தல் இரவாகும்,
வில்லின் கழித்தல் அம்பாகும்,
வீட்டின் கழித்தல் வம்பாகும்.

# குடும்ப நலம்

குலம்வேண்டும்; ஓரேகுலந்தான் நமக்கு வேண்டும்.
குறிக்கோளும் கொள்கைகளும் வேண்டும்; தேக
பலம்வேண்டும்; எப்போதும் நாட்டைக் காக்கப்
படைவேண்டும்; பாடுபடும் உழவர்க் கெல்லாம்
நிலம்வேண்டும்; கனல்கக்கும் கோடை வந்தால்
நிழல்வேண்டும்; அதுபோல மாந்தர் வாழ்வில்
நலம்வேண்டும்; குடும்பநலம் வேண்டும் மென்றால்
நமதுநட வடிக்கைசில மாற வேண்டும்.

குடும்பமென்ப தென்னவென்றால், உறவால் தோன்றும்
கொப்புளத்தின் வட்டந்தான். நமக்கு வேண்டும்
குடும்பநலம் என்னவென்றால், குழந்தை என்னும்
குழிக்கிழங்கைக் குறைப்பதுதான். எல்லோ ருக்கும்
குடும்பநலம் செல்வத்தால் வரலாம்; பத்துக்
குழந்தைகளைப் பெற்றுவிட்டால் வருமா? நல்ல
குடும்பநலம், ஓயாமல் குழந்தை பெற்றுக்
கொண்டிருக்கும் இல்லத்தில் இருப்ப தில்லை.

பாரிவள்ளல் இல்லத்தில், கம்பன் வீட்டில்,
பசுந்தளிரைப் போன்றமக்கள் இருந்தா ரன்றோ?
ஓரிரண்டு குழந்தைகளே இருந்த தாலே
உள்ளபடி ஆங்கமைதி இருந்தி ருக்கும்.
வேரதனில் பழுக்கின்ற பலாப்ப ழத்தின்
விதைகளைப்போல் பலகுழந்தை இருந்தி ருந்தால்.
தேரழுந்தூர் பெருங்கம்பன் கவிதை உள்ளம்
சிதறியன்றோ போயிருக்கும் அவர்க ளாலே!

வரிக்குயில்கள் பாடுகின்ற போதும்; வெள்ளி
வட்டநிலா வானத்தில் நீந்தும் போதும்;
பெருக்கெடுக்கும் உணர்ச்சியினால், ஒன்று பத்தாய்ப்
பெற்றெடுக்கும் குழந்தையெனும் கொழுந்து கூட்டம்
நெருக்கடியின் அடையாள மன்றோ? அந்த
நெருக்கடிக்கிங் கிடங்கொடுத்தால், குடும்ப வாழ்வே
சருக்குநில மாகிவிடும்! அதனால், பெற்றோர்
தயவுசெய்து குடும்பநலம் காக்க வேண்டும்.

வட்டமிட்ட சக்கரமும், நிலவும்; பூவும்
வடிவத்தில் ஒழுங்காக அமைந்தி ருக்கும்.
கட்டமிட்ட வரைபடமும், நோட்டம் பார்த்துக்
கட்டுகின்ற வீடுகளும், அழகு காட்டும்.
திட்டமிட்ட குடும்பந்தான் மகிழ்ச்சி யோடும்
சிறப்போடும் வாழ்ந்துவர முடியும். போலிப்
பட்டமிட்ட படிப்புக்கும், திட்ட மிட்டுப்
பண்படுத்தா வாழ்வுக்கும் சிறப்பே இல்லை.

தக்கபடி இல்லறத்தில் இன்பம் காணச்
சமுதாயம் சீரடைய, மக்கட் பேற்றில்
சிக்கனத்தைக் கையாள வேண்டும். இன்றேல்
தேய்பிறைபோல் குடும்பநலம் தேய்ந்து போகும்.
முக்கனிபோல், முத்தமிழ்போல், அணிலின் கூனல்
முதுகிலுள்ள கோடுகள்போல் மூன்று போதும்.
எக்களிக்க வேண்டுமெனில் இரண்டே போதும்.
இரண்டுவிழி போதுமன்றோ பார்ப்ப தற்கு!

வீடுகட்டி அதில்வாழும் ஒருத்தி, அந்த
வீட்டுக்குள் அடிக்கடிவோர் குருவி வந்து
கூடுகட்ட இடந்தரலாம்; அதுபோல் தன்னைக்
கொண்டானுக் கிடந்தரலாம்; தந்திட் டாலும்;
ஆடைகட்டும் பெண்டிரெலாம் ஓய்வே இன்றி
ஆண்டுதொறும் ஆண்டுதொறும் வயிற்றுக் குள்ளே
மேடுகட்ட விடலாமா? கட்ட விட்டால்
மேன்மேலும் தேகமன்றோ மெலிந்து போகும்.

இத்தனைவேல் இத்தனைவாள் இருந்தால் போதும்
என்றுரைத்த வேந்தருண்டு. நாட்டை வெல்ல
இத்தனைபேர் என்னோடு வந்தால் போதும்
என்றுரைத்த படைத்தலைவர் உண்டு. வீட்டில்
இத்தனைபேர் வாழ்கின்றார் என்ப தாக
எடுத்துரைத்த கணக்கருண்டு. பிள்ளை குட்டி
இத்தனைக்கு மேலிருத்தல் கூடா தென்றே
எடுத்துரைத்தோர் யாருமில்லை அந்த நாளில்.

சலசலெனச் சத்தமிடும் ஆற்று நீரில்
தலைதூக்கும் அலைகளெனத் தழுவும் பெண்டீர்!
கலகலெனப் புலபுலெனப் பெறாதீர் என்றே
கண்டித்தார் முதன்முதலில் பட்டி னத்தார்.
பலகலையில் வல்லபடிக் காசுத் தம்ரான்
பன்றியைப்போல் பெறலாமோ? என்று கேட்டார்.
உலைஇருப்புச் சொற்களினால் பாவின் வேந்தர்
ஊரறிய கருப்பாதை சாத்தச் சொன்னார்.

நீர்கருக்கி உண்பதனால் நன்மை உண்டு;
நெய்யுருக்கி உண்பதனால் உறுதி சேரும்;
மோர்பெருக்கி உண்பதனால் தீமை இல்லை,
முன்னோரின் உழவுமுறை தன்னை மாற்றி
ஏர்பெருக்கி வரின்நன்கு விளையும்; சேலம்
இரும்புவிழித் தெழுந்திட்டால் தொழில்கள் தோன்றும்.
பேர்பெருக்க முயலுங்கள்; முடியா விட்டால்
பிள்ளைகளைப் பெருக்காமல் இருங்கள் போதும்.

பசுக்களெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பிறக்கும்; தாவிப்
பாய்புலிகள் ஐந்தைந்தாய்ப் பிறக்கும்; காட்டில்
வசித்துவரும் சிங்கத்தின் வயிற்றை விட்டு
வருங்குட்டி மும்மூன்றாய்ப் பிறக்கும்; தாயின்
சிசுக்களெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பிறப்ப தோடு,
'சிலசமயம் ஓரிரண்டாய்ப் பிறப்ப துண்டு.
கொசுக்களெல்லாம் முட்டைபல இடுதல் போலக்
குழந்தைபல ஈன்றென்ன ஒரேநே ரத்தில்?

நட்டுவைத்த மலைமல்லி ஒருமூன் றாண்டு
நன்றாக வளர்ந்தபின்பே பூக்கு மென்பர்.
மொட்டுவைத்த பல்வரிசைப் பெண்டி ரெல்லாம்
மூன்றாண்டு முடியும்வரை காத்தி ருந்து,
கொட்டிவைத்த முத்தைப்போல் குழந்தை பெற்றுக்
கொள்வதுவே நலமாகும். அதற்கு முன்பே,
கட்டிவைத்த பூமாலை போன்ற பெண்கள்
கருவுற்றால், கட்டுடல்தான் கெட்டுப் போகும்.

பண்டையநாள் வணிகர்களின் பையைப் போலும்,
பசுங்கொடியில் காய்த்திருக்கும் அவரைக் காயை
உண்டவொரு கருங்குரங்கின் வயிறு போலும்,
உடலுறவால் கருவுற்று, வயிறு வீங்கிக்
கண்டபடி கணக்கின்றிக் குழந்தை பெற்றுக்
களிப்பதுவே சுகமென்று சொல்வ தெல்லாம்
சுண்டல்தோல் கருத்தாகும். பெண்டிர் தம்மைச்
சுமைதாங்கி ஆக்குகின்ற நோக்க மாகும்.

காதலுக்கு வழிவைத்து நமது பெண்கள்
கருப்பாதை சாத்துவதே, சமுதா யத்தின்
மோதலுக்கு வைக்கின்ற முற்றுப் புள்ளி.
முன்னேற வேண்டுமெனில், ஆணும் பெண்ணும்
சீதளத்தில் தாமரைபோல் நின்று கொண்டு
தீக்காய முயலுவதால் பயனே இல்லை.
ஆதலினால் நாம்குடும்பக் கட்டுப் பாட்டை
அவசரமாய்ப் பின்பற்ற வேண்டும் கண்டீர்.

28 –3– 1971 ல், சென்னை வானொலியில் பாடிய கவிதை

# கண்ணீர்

அன்புரு வாகிய பாரியின் வீழ்ச்சிகள்
அன்றைய கண்ணீரே
அன்றைய திங்களெ னுஞ்சிறு செய்யுள்
அவன்மகள் கண்ணீரே.

முன்பொரு பத்மினி வெந்து மடிந்து
முடிந்ததும் கண்ணீரே
மொய்குழல் கண்ணகி என்பவ ளின்கதை
முற்றிலும் கண்ணீரே.

சென்றொரு நாட்டினை வென்று கொணர்ந்திடும்
செல்வமும் கண்ணீரே
திட்டுவ தும்தலை வெட்டுவ தும்சிலர்
செய்கையும் கண்ணீரே.

தன்பொருள் தன்சுக மேபெரி தாமெனும்
தத்துவம் கண்ணீரே
தாய்மொழி மீதபி மானமும் ஞானமும்
தாழ்ந்திடின் கண்ணீரே.

# குதிரை

தார்வேந்தன் போர்வேந்த னாகிக் கண்ணில்
தணல்காட்டிக் கரம்நீட்டி ஆணை யிட்டான்.
போர்வீரர் வெறியோடும் வேகத் தோடும்
புறப்பட்டார் புண்பகைவர் நாட்டை நோக்கி.
ஊர்தோறும் மண்புழுதி எழுப்பிக் கொண்டே
ஓடிற்றுக் குதித்தோடும் குதிரைக் கூட்டம்.
நீர்தோன்றும் ஊற்றோரம் ஆற்றின் ஓரம்
நின்றிருந்த பெண்டிரெல்லாம் அதனைக் கண்டார்.

அசைந்துவந்த தென்றலிலே அசைந்து நின்றே
ஆரவல்லி என்பவளும் அதனைக் கண்டாள்.
இயைந்துவந்த உணர்ச்சியுடன் ஆங்கே வந்த
எழில்முதல்வன் இருவிழியால் அவனை நோக்கிக்
கசிந்துவந்த தேன்மதுரத் தமிழே! கட்டிக்
கற்கண்டே! கனிச்சாறே! என்றான். நெஞ்சைப்
பிசைந்துவந்த நினைவோடு திரும்பிப் பார்த்தாள்.
பேரழகன் ஆரணங்கை விரும்பிப் பார்த்தான்.

ஈடுபடும் கருத்தோடும்! சிறிது நேரம்
இழுத்தடிக்கும் முடிவோடும் ஆர வல்லி
மேடையிலே சென்றமர்ந்தாள். தொட்டான். வார்த்தை
வேலியிட்டு வேறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.
"தேடிவரும் தென்றலுக்குத் தடையா? என்னைத்
திரும்பிப்பார்!" என்றுரைத்தான். திரும்பிப் பார்த்தாள்;
"கோடையிலே பாதிரிப்பூப் பூத்த" தென்றான்.
"குதிரைகளைப் பார்த்தீரா அத்தான்?" என்றாள்.

"காலில்லாக் குதிரைகளைக் கடலில் பார்த்தேன்;
காலுள்ள குதிரைகளைத் தெருவில் பார்த்தேன்;
வாலில்லா மீன்களைநான் விழியில் பார்த்தேன்;
வண்டுதொடும் தாமரையே!" என்றான் "நீங்கள்,
நூலில்லாப் புடவைகண்ட துண்டோ?" என்று
நூலிடையாள் நூதனமாய்க் கேட்டாள். "பெண்ணே!
பாலில்லா மாங்காயை, இழைகள் சேராப்
பட்டுடையை நான்கண்ட தில்லை" என்றான்.

"நான்கண்ட துண்டென்று" நங்கை சொன்னாள்.
"நான்காண வேண்டுமடி பெண்ணே!" என்றான்.
வான்கண்ட மதிமுகத்தாள் உடனே நீல
வானத்தை அவனிடத்தில் காட்ட லானாள்.
"தேன்கண்ட மொழிமாதே! நூலில் லாத
சேலையிந்த வானந்தான் போலு" மென்றான்.
கூன்கண்ட பிறைநெற்றி கொண்ட நங்கை,
குதித்தோடும் குதிரைகளைப் பற்றிக் கேட்டாள்.

பத்தினியே இதனைக்கேள்! நாகப் பாம்பின்
படம்போன்று விரிந்தமைந்த கழுத்தும் மார்பும்;
சித்திரம்போல் ஒழுங்கான உடலும்; நன்கு
சிவந்திருக்கும் மாந்தளிர்போல் நீண்ட நாக்கும்;
கத்துகடல் சங்கைப்போல் நிறமும்; நல்ல
கருநெய்தல் பூப்போன்ற கண்க ளோடே
ஒத்தபல சுழிகொண்ட குதிரை தன்னை
உலகத்தார் பாடலமென் றுரைப்பர் கண்டாய்.

கத்திகொண்டு முகத்தினிலே வெட்டி னாலும்
கனைத்தெழுந்து பகைவர்தமை எதிர்த்துப் பாயும்
சத்திகொண்ட குதிரையினை 'இவுளி' என்பர்.
தமிழ்க்குயிலே அதன்நிறமோ, சலவை செய்த
வத்திரத்தை நினைவூட்டும். வாழைப் பூவின்
மடல்போலும் அதன்செவிகள் அமைந்தி ருக்கும்.
உத்தமியே! மிகச்சிறந்த குதிரை யெல்லாம்
ஒருநூறு விரலுயரம் இருக்கு மென்பர்.

நெற்றியிலே கறுஞ்சாந்துப் பொட்டு வைத்த
நேரிழையே! மற்றுமொரு செய்தி கேளாய்;
சிற்றரசன் அனலேம ரெட்டி என்பான்
சீர்சிறந்த குதிரையொன்றை வளர்த் திட்டானாம்!
வெற்றியிலே முற்றிவந்த தெலுங்கு நாட்டான்
விசயநகர் கிருஷ்ணதேவ ராயன், அந்தக்
குற்றமிலாக் குதிரையினை விரும்பிக் கேட்டும்
கொடுப்பதற்குச் சிற்றரசன் மறுத்திட் டானாம்.

தொடுங்காதல் சுவையறிந்த மாதே! அன்பின்
தூதாக வந்தவளே! குறும்பர் போலே,
அடங்காத குதிரைகளை யெல்லாம், ஏறி
அடக்கியவன் தேசிங்கு ராசன் என்பர்.
கொடுங்கோலன் ரஞ்சித்சிங் 'லைலி' என்னும்
குதிரைக்குப் பலலட்சம் செலவிட் டானாம்!
நெடுங்கீர்த்தி பெற்றிருந்த சுல்தான் ஐபெக்
நிறக்குதிரை மீதிருந்து வீழ்ந்தான். என்றான்.

புதுக்காதல் மாதரசி அவனை நோக்கிப்
பூமானே! நாமிதனைக் குதிரை என்றே
எதற்காக அழைக்கின்றோம்? என்று கேட்டாள்.
எழில்முதல்வன் நாயகியைக் கூர்ந்து நோக்கிக்
குதித்தோடும் காரணத்தால் குதிரை என்று
கூறுகின்றோம் கொடுமுல்லைப் பூவே! என்றான்.
இதைப்போன்ற சொல்விளக்கம் ஒவ்வோர் நாளும்
எனக்குரைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள்.

# உத்தரவின்றி உள்ளே

அந்நாளில் காவிரி ஆற்று வெள்ளம்
உத்தர வின்றி உள்ளே வந்ததால்
ஓங்குபுகழ் நகராம் உறையூர் அழிந்தது.

பொல்லாக் கருங்கடல் பொங்கிப் பெருகி,
உத்தர வின்றி உள்ளே வந்ததால்
முத்தமிழ்ச் சங்கம் மூழ்கிற்று. மேலும்,
ஏழ்தெங்க நாடும் எங்கோ மறைந்தது.

நல்லவர், மிகமிக நம்பிக்கைக் குரியவர்
உத்தர வின்றி உள்ளே வரலாம்.
அந்தித் தென்றலும் அப்படி வரலாம்.
மற்றவர் வருவதும் வரநாம் விடுவதும்
குற்றத்திற்கு விருந்து கொடுத்தல்போ லாகுமே!

# ஆதியும் பாதியும்

ஆதியில் சாதி இல்லை;
ஆயிரம் பேத மில்லை;
வீதிகள் தோறும் தெய்வ
விளம்பரக் கோயி லில்லை;
பாதியில் தட்டுக் கெட்டோம்;
பகைவரால் பிரிக்கப் பட்டோம்;
சாதனை வேண்டு மன்றிச்
சாதியா நமக்கு வேண்டும்?

ஆதியில் ஆற்றைக் கண்டார்;
ஆற்றோரம் நகரம் கண்டார்;
மேதினி குடைந்து சென்றார்;
விண்ணிடை ஏறிச் சென்றார்;
பாதியில் திறமை குன்றிப்
பஞ்சாங்க நெஞ்சம் கொண்டார்
சாதகம் பார்ப்ப தாலே
சரித்திரம் வளர்வ துண்டோ?

ஆதியில் அழகைக் கண்டார்;
அழகிலே மயக்கம் கொண்டார்;
காதலில் உறவு கொண்டு
கற்பினில் குடும்பம் கண்டார்;
பாதியில், பழுத்த பொய்யர்
பற்பல சடங்கு சேர்த்தார்;
வேதமும் சடங்கும், காதல்
வெற்றிக்குத் தடைக ளன்றோ?

ஆதியில் வாழ்ந்தோர்க் கெல்லாம்
அச்சமே இறைவ னானான்.
ஓதிய மேலோர்க் கெல்லாம்
உண்மையே இறைவ னானான்.
பாதியில், நாட்டை யாண்ட
பார்த்திபன் இறைவ னானான்.
மேதினி மீதில் இன்றோ
விஞ்ஞானி இறைவ னானான்.

# அதை விட

பாரதி இறந்த ஆண்டிலே பிறந்தநான்
பாரதி தாசனின் பாடலைப் பயின்றதால்
ஒருவா றென்னை உயர்த்திக் கொண்டேன்.

செய்யுள் இலக்கணம் தெரிந்து கொண்டபின்
தடுமாற்றம் இல்லாத் தகுதிபெற லானேன்.
தகுதி இருப்பின் தனித்தி யங்கலாம்.
அத்தகுதி என்னிடம் அதிக மிருப்பதால்
தமிழ்க்கவிதை உலகில் தனித்தியங்கு கின்றேன்.

பெரும்பாலும் கவிஞர்கள் பிறரைப்பின் பற்றி
எழுதும் வழக்கம் இங்குண்டே! அந்த
நிழல்வழி வாசலை விட்டு நீங்கி
எழுதும் கவிஞன்நான். இவரையோ அவரையோ
பின்பற்றி எழுதப் பிரியப் படாதவன்.

கணக்கைப் போன்றதே கவிதை என்பதால்,
கவிதை புனைந்திடக் கற்பனை வேண்டும்
என்னும் கருத்தைநான் ஏற்பதே இல்லை.

புகழ்வெறி எனக்குப் புள்ளி யளவும்
இல்லை! சராசரிப் பொறாமையும் இல்லை!

மடையனாய் இருப்பதில் உள்ள மகிழ்ச்சி,
அறிஞனாய் இருப்பதில் இல்லை ஆதலால்;
முட்டாளாய் இருக்கவே முயன்று வருகிறேன்.

நானொரு கவிஞன்! அதைவிட
நானொரு நல்லவன் இந்த நாட்டிலே!

# என் முதல் சந்திப்பு

முப்பத்தைந் தாண்டு கட்கு முன்னர்யான்
பாவேந்தர் புதுவை பாரதி தாசனை
நேரில் சென்று சந்திக்க நினைத்தேன்.

பயணச் செலவுக்குப் பணமில்லை ஆதலால்,
நண்பர்கள் புலரை நாடினேன் ஒருசிலர்
கையையும், ஒருசிலர் பொய்யையும் விரித்தனர்.
புறப்பட்டுப் புதுவைக்குப் போக வேண்டுமே
என்செய்வ தென்றுநான்
எண்ணிக்கொண் டிருக்கையில்,
மூவர் பாடிய கீவளூர் கோவிலில்
வெள்ளை யடிக்கும் வேலை கிடைத்தது.

மலைப்பிளவு வழியாய் வந்த பகைவர்கள்.
கொள்ளை யடித்தனர் கோவிலில்; நானோ,
வெள்ளை யடித்தேன். வெள்ளை யடிக்கையில்
கலந்தசுண் ணாம்புநீர் கரத்தில் வழிந்ததால்;
வழிந்த கரத்தில் எழுந்தது கொப்புளம்.

ஆறு நாட்கள்நான் சுண்ணாம் படித்தேன்.
ஆறாம்நாள் மாலை அதற்குரிய கூலியாம்
ஒன்றரை ரூபாய் உடனே கிடைத்தது.

புதுவையை நோக்கி புறப்பட்ட ரயிலில்
அன்றே ஏறினேன் அடுத்தநாள் காலையில்
பாண்டியில் இறங்கிப் பாவேந்தர் அவர்களைக்
கண்டேன்! கண்டுநான் களிப்படைந் தேனே!

# எழுப்பியவர் எங்கே

முதறிஞர் முதுமொழிகள் முத்திரைப்பொன் னாகும்;
மொழியுணர்ச்சி ஓரினத்தில் முதலுணர்ச்சி யாகும்;
நீதிநெறி விளக்கமெலாம் அனுபவங்க ளாகும்;
நிறைவேறா எண்ணமெலாம் ஏக்கங்க ளாகும்;
சாதிமதம், பிரித்தாளும் தந்திரங் களாகும்;
சாத்திரமும் கோத்திரமும் தடைகற்க ளாகும்;
ஆதரவு காட்டுவதே அன்புவழி யாகும்;
அஞ்சுதற்கிங் கஞ்சுவதே அறிவுடைமை யாகும்.

பொருளையெலாம் எல்லார்க்கும் பொதுவாக்கல் வேண்டும்;
புத்தகத்தை வணங்குவதால் வந்திடுமோ கல்வி?
நரிமனமும் நாய்க்குணமும் வளர்ந்தோங்கி வந்தால்,
நன்மையெலாம் பின்வாங்கும், வஞ்சகமே ஓங்கும்.
உரியசெயல் செய்திடலாம் அரியசெயல் எளிதோ?
ஊக்கத்தில் வாராமல் தூக்கத்தில் வருமோ?
திருவருளால் எழுப்பிடலாம் செத்தாரை என்றால்,
செத்தாரை எழுப்பியவர் ஏன்செத்துப் போனார்?

# இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும், செங்கதிரும், முகிலும் வேறு;
மண்வேறு, மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு, வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

ஆக்கும்வரை நாமதனை அரிசி என்றும்,
ஆக்கியபின் சோறென்றும் சொல்லு கின்றோம்,
பூக்கும்வரை அரும்பென்றும், பூத்த பின்பே
பூவென்றும் சொல்லுகின்றோம் அதுபோல் சொல்லைச்
சேர்க்கின்ற நேரத்தில், எதுகை மோனை
சேர்க்காமல், அடியளவை அறிந்தி டாமல்,
வார்க்கின்ற வடிவந்தான் வசனம்; யாப்பில்
வந்தடங்கும் வார்த்தைகளே கவிதை யாகும்.

பழுத்திருந்தால் சாறுவரும்; வயலில் தண்ணீர்
பாய்ந்திருந்தால் ஏர்கள்வரும்; அதுபோல் இங்கே,
எழுந்திருந்தால் அசைகள்வரும்; இரண்டு சீரின்
இடைவெளியில் தளைகள்வரும்; தளைகள் சென்றே
அழைத்திருந்தால் அடிகள்வரும்; அடியின் கீழே
அடியிருந்தால் தொடைகள்வரும்; தொடைகள் நன்கு
செழித்திருந்தால் பாக்கள்வரும்; இவற்றை யெல்லாம்
தெரிந்துகொண்டு கவியெழுதத் தொடங்க வேண்டும்.

தேமாவும் புளிமாவும் மரத்தில் காய்க்கும்;
சீர்களிலும் அக்காய்கள் நன்கு காய்க்கும்.
ஏமாந்தால் தளைதட்டும்; வெள்ளைப் பாட்டின்
இறுதிச்சீர் காசுதரும்; செடியில் பூத்த
பூமீது வண்டுவந்து தங்கும்; நல்ல
புலவர்களின் பாடல்களில் கீர்த்தி தங்கும்.
சாமான்ய மக்களுக்கும் விளங்கும் வண்ணம்
தமிழ்க்கவிதை தரவேண்டும் இந்த நாளில்.

எருவினிலே பயிர்விளையும்; சிறந்த கேள்வி
எழுப்புவதால் ஆராய்ச்சிவிளையும்; அந்தி
இரவினிலே குளிர்விளையும்; நுணுக்கத் தோடே
எழுத்தெண்ணில் முன்னோர்போல் கற்று வந்தால்,
அரும்பொருள்கள் உள்ளத்தில் விளையும்; மிஞ்சும்
அறிவினிலே புகழ்விளையும்; இவற்றை யெல்லாம்
பெரும்பாலும் அறியாமல் எழுது வோர்க்குப்
புகழெங்கே சிறப்பெங்கே விளையக் கூடும்?

# சிவந்திப்பூ சிரிக்கிறது


"ஆடுகளே ஏழைகளின் பசுக்கள்" என்றேன்.
"ஆமப்பா ஆ" மென்றான் ஆண்டி யப்பன்.
"வீடுகளில் வளர்ப்பதனால் அவற்றை யெல்லாம்
வீட்டுவிலங் கென்கின்றோம் நண்பா" என்றேன்,
"மேடுகளில், மரக்கிளையின் உச்சி தன்னில்,
விளையாடும் குரங்குகளை யெல்லாம், வேறு
நாடுகடத் திடவேண்டும்" என்றான். "வேறு
நாட்டினிலும் மரக்கிளையில் ஏறு" மென்றேன்.

"கழுதையின்மேல் ஏறியவன், ராஜ ராஜன்
காலத்தில் வாக்களிக்க முடியா" தென்றான்.
"பழங்கதையேன் சொல்கின்றாய் நண்பா! செத்துப்
பாடையின்மேல் செல்லுகின்ற பிணமும் இங்கே
எழுந்துவந்து வாக்களித்த தாகத் தேர்தல்
எண்ணிக்கை காட்டுமிந்த நாளில்" என்றேன்.
"பழமிருந்தால் காயிருக்கா தப்பா" என்றான்.
"பனியிருந்தால் மழையிருக்கா தென்றேன்" நானும்.

சுடர்வெய்யில் கோடுகளால் கமலப் பூக்கள்
தூங்காமல் சிரிப்பதனைக் கண்டோம். ஆங்கோர்
முடத்தொங்கின் பக்கத்தில் வந்து நின்றோம்.
மூவாறு பதினெட்டு வயது கொண்ட
நடைநளினப் பெண்ணொருத்தி நடந்து வந்தாள்.
நான்பார்த்தேன்; நானேதான் முதலில் பார்த்தேன்.
அடைமொழியால் அப்பெண்ணை அழைப்ப தென்றால்,
அச்சாரப் பச்சைமயில் அந்த மங்கை.

இஞ்சிக்கும் மஞ்சளுக்கும் இடையில் வைக்கும்
எலுமிச்சம் பழத்தைப்போல்; கணக்கப் பிள்ளை
அஞ்சுக்கும் மூன்றுக்கும் நடுவில் வைத்தே
அமைகின்ற நான்கைப்போல்; ஒவ்வோர் நாளும்
நெஞ்சுக்கும் நினைவுக்கும் இடையில் மாந்தர்
நிறுத்தும்பே ராசையைப்போல் எங்கள் பக்கம்
மஞ்சத்து மல்லிகைப்பூ வந்து நின்றாள்;
மாமன்வந்த காரணத்தால் உடனே சென்றாள்.

ஒத்திகைக்கு வருவோரின் உதட்டை, எச்சில்
உதடுகளால் துடைத்துவிடும் பருவப் பெண்கள்,
குத்தகைப்பூந் தோட்டமப்பா என்றேன். அப்பெண்
கூந்தலின்மேல் சிவந்திப்பூ சிரிக்கக் கண்டு;
செத்தகுரங் கைத்தலையில் சுமந்து கொண்டு
செல்வதைப்பார் சிங்காரி என்று சொன்னான்.
சத்தத்தைக் கேட்டந்தக் கொண்டைக் காரி
சண்டைக்கு வருவதற்குள் நழுவி விட்டோம்.



பாவேந்தருக்குப் பிறகு ஓரே சிறந்த கவிஞர்
சுரதாதான். சுயமரியாதையுடன் பாடும்
சுதந்திரக் கவிஞர் அவர்.
-தந்தை பெரியார்

காலத்தை வெல்லும் கவிதைக்குச்
சொந்தக்காரர் கவிஞர் சுரதா.
-பேரறிஞர் அண்ணா

சுரதா அவர்களை வெகுநாட்களாக அறிவேன்.
இவருடைய வசன நடை மிகவும்
போற்றுதற்குரியது. ஜீவன் நிரம்பியது.
பாத்திரத்திற்கேற்ப கருத்துப் பளீரென்று
வருகிறது.
-நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

சுரதாவின் எழுத்துக்குச் சுரதாவின் எழுத்தே நிகர்.
அவர் யாரையும் பின்பற்றுவதில்லை.
திருடுவதில்லை. தானே தோன்றும் சொற்றொடர்
ஒவ்வொன்றும் இனிக்கும் கவிதைத்
துணிக்கை.
-பாவேந்தர் பாரதிதாசன்